பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 29 வெள்ளிக்கிழமை (11.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 137

# உணவுப் பற்றாக்குறை வருமென ஐ.நா. நிபுணர்கள் அபாயமணி!

## வடக்கு, கிழக்கில் இப்போதே நிலைமை மோசம்!!

கொழும்பு, ஏப்ரல் 11

**இலங்கையில் உணவுப் பற்றாக்குறை உண்டாகும் சாத்தியம் குறித்து ஐ.நாவின் உணவு நிபுணர்கள் அபாய மணி அடித்துள்ளனர். உள்நாட்டு மோதல், நெல் உற்பத்தி வீழ்ச்சி, பொருள்களின் விலை உயர்வு காரணமாக இந்நாட்டில் பல்லாயிரக்கணக்கானோர் உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் அபாயம் அதிகரித்துள்ளது.**

**இவ்வாறு ஐ.நாவின் உணவு அதிகாரிகள் எச்சரித்திருக்கின்றனர்.**

வடக்கு, கிழக்கு மற்றும் உலர்வலயப் பகுதியிலும் இப்போதே பெரும் போசாக்கின்மை காணப்படுகிறது. மோதல்களால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளில் மிக மோசமான உணவுப் பற்றாக் குறையும் வாழ்வாதார நெருக்கடியும் காணப்படுவதாகவும் ஐ.நா. அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் கிராமப் பகுதிகளில் விசேடமாக மிக அதிகமாகப் போசாக்கின்மை காணப்படுகின்றது. 25 வருட உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இந்நிலைமைமோசமாகவுள்ளது என்றும் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத்திட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கிலும் நாட்டின் மத்திய உலர் வலயப் பகுதிகளிலும் அதிகளவு போஷாக்கின்மை காணப்படுகின்றது என உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான பிரதித் தலைவர் ஜேன் யுவைஸ் லிகுயும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மிகவும் வறிய பகுதிகள் இவை என்பதையும், இங்கு குறைந்தளவு கல்வியறிவு, போதியளவு சுகாதார வசதியின்மை மற்றும் உயர்ந்தளவு போஷாக்கின்மை காணப்படுவதையும் தங்களது தகவல்கள் வெளிப்படுத்துகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வறுமையும் அதிகளவு எரிசக்தித் தேவைகளும் கிராமிய விவசாயப் பகுதிகளில் காணப்படுவதாகக் கொழும்பிலுள்ள யுஎ செவ் அமைப்பின் தலைமைத் தகவல் தொடர்பாடல் அதிகாரி கோர்டன் வெய்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மத, கலாசார மையங்களுக்கு சேதம் ஏற்படாமல் தவிர்க்குமாறு அரசு - புலிகளுக்குக் கோரிக்கை!

### மடு நிலைமையை அடுத்து மன்னிப்புச்சபை அறிக்கை

கொழும்பு, ஏப். 11

மதம் சார்ந்த கட்டடங்கள் உட்பட அனைத்து கலாசார சொத்துகளுக்கும் சேதமேற்படுத்தப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசு மடு தேவாலயப் பகுதியில் தங்கியிருந்த பொதுமக்கள் மீது இம்மாதம் ஷெல் தாக்குதல் மேற்கொண்டதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபையின் சர்வதேச செயலகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளவற்றில் முக்கிய பகுதிகள் வருமாறு:

தாக்குதலொன்றின்போது மோதலில் ஈடுபட்டுள்ளவர்களைத் தாக்குவது சட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் நேற்று சிப்பாய் மரணம்

யாழ்ப்பாணம், ஏப்.11

நல்லூர் கோவில் வீதியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்றுக் காலை 8 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் பிஸ்டலால் சுட்டதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மேலும் ஒருவர் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கோவில் வீதியில் கைலாச பிள்ளையார் கோவிலுக்கும் அகதிகளுக்கான ஐ.நா. தூதர

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவன்ஸ அணி எம்.பிக்களின் வாகனங்கள் பலவந்தமாகக் கடத்தல்!

கொழும்பு, ஏப். 11

ஜே.வி.பி. இரண்டாகப் பிளவுற்றதை அடுத்து விமல் வீரவன்ஸவின் தரப்பைச் சேர்ந்த நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களது வாகனங்கள் கடத்தப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

களுத்துறை மாவட்ட ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பியசிறி விஜேநாயக்கவின் 'டொயோட்டா' கப்ரகவாகனம், இரத்தினபுரி மாவட்ட ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அசல ஜாகொடவின் 'டொயோட்டா' ஆகியன நாடாளுமன்றத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது கடத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, ஜே.வி.பியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஜாதா அழகக்கோனின் வாகனம் நாடாளுமன்ற வாகனத்தரிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் சதியினாலேயே ஜே.வி.பி. இரண்டாகப் பிரிந்தது!

### விமல் வீரவன்ஸ அணியின் எம்.பி. சொல்கிறார்

கொழும்பு, ஏப்.11

ஜே.வி.பி. இரண்டாகப் பிளவு படுவதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் சூழ்ச்சியே காரணம் என்று விமல் வீரவன்ஸ தலைமையிலான ஜே.வி.பி. அணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் எம்.பி. பியசிறி விஜயநாயக்க கூறியவை வருமாறு:-

ஜே.வி.பியின் அரசியல் நடவடிக்கையைப் பிடிக்காத சிலர் அக்கட்சியை முற்றாக அழித்துவிட முயற்சி செய்கின்றனர். அந்த முயற்சியின் ஒரு விளைவாகவே ஜே.வி.பிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் சதித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுலோவோக்கியா 10 ஆயிரம் ஏவுகணைகளை இலங்கைக்கு விற்றமை குறித்து கடும் எதிர்ப்பு

### உலகப் பாதுகாப்பு அமைப்பு தெரிவிப்பு

இலங்கைக்கு 10 ஆயிரம் இராணுவ ஏவுகணைகளை சுலோவோக்கியா விற்பனை செய்துள்ளமை குறித்து "உலகப் பாதுகாப்பு" அமைப்பின் ஆயுத வர்த்தக கண்காணிப்புக் குழு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

சுலோவோக்கியாவின் இந்தச் செயற்பாடானது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆயுத ஏற்றுமதி விதிமுறைகளை மீறியதாகும் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

25 ஆண்டுகளாக போர் நடந்துவரும் இலங்கையில் இந்த ஆயுதங்கள் அனைத்துமே பொதுமக்களுக்கு எதிராகத்தான் பயன்படுத்தப்பட உள்ளது என்றும் அது கவலை தெரிவித்துள்ளது.

பொதுமக்களுக்கு எதிராகப் பயன்படுத்

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஊடக சமூகம் மீதான அச்சுறுத்தல்

## சர்வதேச ஊடக அமைப்புகள் ஜனாதிபதிக்கு நேற்றுக் கடிதம்

கொழும்பு, ஏப்ரல் 11

இலங்கையில் ஊடக சமூகம் அச் சுறுத்தலை எதிர்நோக்கி வருவது கவலையளிக்கின்றது என 46 சர்வதேச ஊடக அமைப்புகள் ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளன.

பத்திரிகையாளர்களும் ஊடக ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் இலங்கையில் அன்றாடம் பாரதூரமான அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருகின்றமை மிகுந்த கவலை அளிக்கிறது எனச் சர்வதேச ஊடக சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் சமூகம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மேற்படி கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

உலகளாவிய ரீதியிலும் இலங்கையிலும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்த படையினரின் சம்பளத்தைப் பெற உறவினர்கள் காத்துக்கிடக்கும் அவலம்

### அரசை வைகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, ஏப்ரல் 11

உயிரிழந்த படையினரின் சம்பளத்தை அவர்களின் உறவினர்களுக்கு வழங்காது அரசு அவர்களை ஏமாற்றி வருகின்றது என்றும் இப்பணத்தைப் பெற்றுக்கொள்ள அவ்வுறவினர்கள் வங்கியில் காத்துக்கிடக்கின்றனர் என்றும் ஐ.தே.கட்சியின் தயாசிறி எம்.பி. குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் சந்தர்ப்பங்களை வன்முறைகள் பாதிக்கும்

### ஆர்பர் அம்மையார் கவலை தெரிவிப்பு

பொதுமக்கள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்கொள்ளப்படும் வன்முறைகள் சர்வதேச சட்டத்தை மீறும் செயற்பாடுகளாகும். இவை தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உள்ள சந்தர்ப்பங்களை பாதிப்படையச் செய்யும் என்று விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஆயுதக் குழுக்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றார் என்று ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உள்ளிட்ட 15 பேர் பலியாவதற்குக்கா

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அஞ்சலிக்கின்றோம்

யாழ்ப்பாணம் மாநகர சபையில் 25 ஆண்டுகளுக்கு மேலாக சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தராகவும், மோட்டார் வாகனப் பிரிவின் அத்தியட்சகராகவும், சிறந்த நிர்வாகியாகவும் கடமையாற்றியதோடு, சபையின் சகல செயற்பாடுகளிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்து, கடமை உணர்வுடனும், கண்ணியத்துடனும் கடமையாற்றி அமரத்துவமடைந்த **இராசையா இராஜேந்திரன்** அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

யாழ்.மாநகர சபை நண்பர்களும்,
மோட்டார் வாகனப் பிரிவுப் பணியாளர்களும்.

(சி/552282)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | மறைவு |
|---|---|
| 15 | 11 |
| ★ | ★ |
| 02 | 03 |
| ★ | ★ |
| 1930 | 2008 |

அமரர்
## சோமசுந்தரம் செல்லம்மா

கடந்த (11.03.2008) செவ்வாய்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிநிகழ்வில் கலந்துகொண்டு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி, தந்தி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு இன்று (11.04.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஈஞ்சடி,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
T.P. 060 221 6388

தங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
ஜேர்மன், பிரான்ஸ், கனடா, லண்டன்
சுவிஸ், இத்தாலி, அவுஸ்ரேலியா,
கொழும்பு, யாழ் இல் வசிக்கும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 | 12 |
| ★ | ★ |
| 11 | 03 |
| ★ | ★ |
| 1929 | 2008 |

## செல்லையா சுப்பிரமணியம்

கடந்த (12.03.2008) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் செல்லையா சுப்பிரமணியம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபந் தெரிவித்த அனைவருக்கும் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறோம். இன்று(11.04.2008) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

வங்கியடி
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்
குடும்பத்தினர்.

# 30ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 24 | 13 |
| ★ | ★ |
| 03 | 03 |
| ★ | ★ |
| 1925 | 2008 |

## திருமதி ஆண்டியப்பர் வள்ளியம்மாள்

இவர் சிங்கப்பூர் ஒய்வு பெற்ற புகையிரதநிலைய அதிபர் வயிரமுத்து தம்ப தியினரின் அன்பு மகளும், தமோதரம்பிள்ளை, அன்னமயப்பிள்ளை, நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.04.2008) சனிக்கிழமை எரிஞ்ச அம்மன் கோவிலடி அந்தியேட்டி மடத்திலும் ஆத்ம சாத்திப் பிரார்த்தனைக் கிரியைகள் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வி.எம் றோட்,
பருத்தித்துறை.

(சி/552272)

தகவல்
Dr.ஆண்டியப்பர் R.M.P
(கணவர்)

வலி. கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி

# கூட்டுறவு நகர் திறப்பு விழா அழைப்பு

**தலைவர்:** திரு.க.பேரின்பநாயகம்
(தலைவர்- வலி.கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி)

**காலம்:** 11.04.2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 - 9.00 மணி

**இடம்:** ஆவரங்கால் தெற்கு, புத்தூர்.

**பிரதம விருந்தினர்:** திரு.அ.சுப்பிரமணிய சர்மா
(கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும் வடமாகாணம்)

**சிறப்பு விருந்தினர்:** திரு.போ.சிவலிங்கம்
(கூட்டுறவு உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

பணிப்பாளர்களும்
பணியாளர்களும்

வலி.கிழக்கு வடபகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அச்சுவேலி


# மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ வைத்தியர்
Dr.P.ஆறுமுகம் அவர்களை

பலரின் வேண்டுகோளுக்கு இணங்க
எதிர்வரும் 13/04/2008 வரை சந்திக்கலாம்
* லீவு நாள்களிலும் சந்திக்கலாம்.

T.P. 222 2417
0777569205

ஸ்ரீ பாலாஜி இன்,
293, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/552281)

# நினைவு மலர்களுக்கான

பல வர்ண கலர்ப்படங்கள்
விற்பனைக்கு உண்டு

**பிள்ளையார்படம் 5 ரூபா**

பிள்ளையார்அச்சகம், நல்லூர்.
நல்லைக்குமரன் அச்சகம் முத்தவிநாயகர் கோயில் கரவெட்டி.
T.P: 021 226 4012

# விற்பனை

**புதுவருட மலிவு விற்பனை**

VCD/MP3 - 50/=
4 IN DVD } தமிழ்
4 IN DVD, MP3 } ஆங்கிலம் 120/=

வியாபாரிகளுக்கு மேலும் கழிவு வழங்கப்படும்.

**FLASH CD HOUSE**
No.1, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

(72995)


# கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக ஊழியர்
சு.தவராசா அவர்களின்
அன்புத் தாய்

## சுப்பிரமணியம் இலட்சுமிப்பிள்ளை

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.

(சி/552275)

# கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சகஊழியர்
உ.பாலகிஷ்ணன் அவர்களின்
அன்பு மனைவி

## பாலகிஷ்ணன் பத்மினி

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.

(சி/552276)

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் முருகையா

*(ஒய்வு பெற்ற தபாலதிபர்)*

யாழ்ப்பாணம், அத்தியடியை பிறப்பிடமாகவும் ஸ்ரான்லி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் முருகையா நேற்று (10.04.2008) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்
தொ.பே. 0774369220

தகவல்:
ஜெயந்திகுமார்(மகன்)
(அதிபர், விக்னா கல்வி நிறுவனம்)

## திருமதி நன்னித்தம்பி மகேஸ்வரி



பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நன்னித்தம்பி மகேஸ்வரி நேற்று (10.04.2008) மதியம் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் சீனிவாசகம் நன்னித்தம்பியின் அன்பு மனைவியும் ஆறுமுகம் - மீனாட்சி தம்பதியரின் மூத்த மகளும் செல்வி ந.நாகபூரணம், திருமதி க.லிங்கேஸ்வரி(டென்மார்க்), அமரர் பரமசிவம், ஆனந்தராஜா(கொழும்பு), திருமதி யோகேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆ.கணேசலிங்கம்(டென்மார்க்), ஸ்ரீதேவி(கொழும்பு), ம.சிவானந்தன்(டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2008) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடி நிலை மயானத்தல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

தகவல்:
ந.ஆனந்தராஜா
(மகன்)

## யோகம்மா நடராசா



யாழ்ப்பாணம், பலாலி வீதி, இரண்டாம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யோகம்மா நடராசா நேற்று (10.04.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் திருநாவுக்கரசுவின் அன்புச் சகோதரியும் சீலாலெட்சுமி, கமலேஸ்வரி, பராசக்தி (டென்மார்க்), பரம்சோதி (சுவிஸ்லாந்து), காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் வரதலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகலிங்கம், புரம்சோதி, நாராயணசாமி, மங்கையர்க்கரசி, கமலாதேவி, வசந்தினிதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஜெய்சீலன், ஜெயபாலன், ஜெயகாந்தன், கேதீஸ்வரி, கிருஷ்ணரூபி, கிருஷ்ணவேணி, சபேசன், கவிதா, சுவேதா, ராஜா, குமார் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.04.2008) வெள்ளிக்கிழமை நண்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.9, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,யாழ்ப்பாணம்.

தகவல்:
ஜெயபாலன்
(வாகினி நகைமாடம்)

## ஆறுப்பிள்ளை மகேந்திரன்

*(மீசை இந்திரன் - விசுவமடு)*



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் தொட்டியடி, விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப்பிள்ளை மகேந்திரன் நேற்று (10.04.2008) வியாழ்க்கிழமை விசுவமடுவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுப்பிள்ளை- பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சீனித்தம்பி- செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற விஜயகுமாரி மற்றும் ஆதிலட்சுமியின் அன்புக் கணவரும் திவாகரன், பாரதி, கஜனா, கஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2008) வெள்ளிக்கிழமை விசுவமடுவில் நடைபெறும்.

டச்சு வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

## விசுவர் சின்னையா



மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விசுவர் சின்னையா (09.04. 2008) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான விசுவர்- நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம், தருமலிங்கம், பொன்னம்மா, அமரர் தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியம், சின்னராசா, நடராசர், அமரர் செல்லம்மா, நல்லம்மா ஆகியோரின் மைத்துனரும். மல்லிகாதேவி (சா.ப.நோ.கூ.ச), விமலாதேவி, சறோஜா(ஆசிரியர்), பத்மநாதன்(Denmark), சிவபாதம்(Swiss), கமலா(வன்னி காட்வெயர்- வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணபிள்ளை(ஆசிரியர்), பரமேஸ்வரன்(கல்வயல்), சண்முகநாதன்(G.S), மகேஸ்வரன் (வன்னி காட்வெயர்- வவுனியா), இராசமலர்(Swiss), சுவர்ணமாலா (Denmark) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(12.04.2008) சனிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
தொ.பே. 060-221-3434
0779004053

(73052)

தகவல்:
அன்னம்மா(மனைவி)
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் கடந்த பங்குனி உத்தர தினத்தன்று நடைபெற்ற தேர்த்திருவிழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள். பஞ்சமூர்த்திகள் தேருக்கு எழுந்தருளுவதை முதலாவது படத்திலும் தேர்கள் பவனி வருவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(250)*

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.11

நல்லூர் கைலாய பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி எழுந்தருளி கொடியேற்றம் இடம்பெறும்

எதிர்வரும் 19 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (203)

* * *

அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 8 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202)

* * *

சாவகச்சேரி பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-207)

* * *

நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா கடந்த 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 6 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.11

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு ஸ்ரீ விநாயகர் ஆலயச் சப்பர வெள்ளோட்ட விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

புதிய சப்பரத்தை இராசா டீசல் பொறியிலாளர்கள் உருவாக்கியுள்ளனர். (202)

* * *

நீர்வேலி,ஏப்.11

நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு மஞ்சத் திருவிழா நடைபெறும். (202-224)

* * *

மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் புதுவருடதினமான நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை விசேட அபிஷேகம் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை திருவிழா நடத்தப் படையினர் அனுமதி அளித்துள்ளனர் எனவும் -

திருவிழாவில் கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் காலை 9 மணிக்கு முன்னர் தெல்லிப்பழை தடைமுகாமுக்கு வருமாறும் ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (202)

## விருந்தினரை உபசரிக்கும் பண்பு

*வள்ளுவர் காலத்திலேயே பெண்களுக்கு உயர்வான இடம் வழங்கப் பட்டிருந்தது. இதனால்த்தான் மனைவியை வாழ்க்கைத்துணை என்று கூறப்பட்டது. ஓர் இடத்தை தெரிந்து கொள்வதற்காக வழிகாட்டுபவருடன் ஒருவர் செல்லும் போது அங்கே வழி காட்டுபவர் தான் பெறுமதியானவர். அப்பொழுது வழி காட்டுபவர் தான் துணை. அவரை நம்பித் தான் இடம் தேடிச் செல்பவர் குறிப்பிட்ட இலக்கினை அடையமுடியும். அதேபோலத் தான் இல்லற வாழ்க்கையில் ஒருவனுக்கு துணையாக நின்று செயற்பாடு இல்லறத்தானை சேர வேண்டிய இலக்கிற்கு அவனது மனைவியே அவனை இட்டுச் செல்கின்றாள்.*

ஞானக்கதிர்

*விருந்தினரை உபசரிக்கும் இயல்புடைய இளையான் குடிமாறனாரிடம் இரவு நேரம் அதுவும் மழை பெய்த கொண்டிருக்கும் பொழுது விருந்தினர் ஒருவர் வந்து சேர்கின்றார். அப்பொழுது விருந்தினரை உபசரிக்கக் கூடிய எந்த வசதியும் அவர்களிடம் இருக்கவில்லை. ஆனால் இளையான் குடிமாற நாயனாரின் மனைவி வயலிலே விதைத்து வெள்ளத்தில் மிதக்கும் நெல்லை அரிசிக்கும் கொல்லைப்புறத்திலே உள்ள கீரையைக் கறிக்கும் வீட்டுக்கூரையின் தடிகளை விறகிற்கும் பயன்படுத்தி விருந்தினரை உபசரிக்கலாம் என்று கணவனுக்கு ஆலோசனை கூறுகின்றாள். அதன்படியே இருவரும் செயற்பட்டு வந்திருந்த விருந்தினரை உபசரிக்கின்ற நிலையைப் பார்க்கின்றோம். அங்கே மனைவி எவ்வாறு வாழ்க்கைக்கு ஏற்ற சிறந்த துணையாக செயற்பட முடிந்தது என்பதை நாம் பார்க்கின்றோம் அல்லவா.*



வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்திய சைவசமய அறிவுப் பரீட்சை - 2008இல் அதிகூடிய புள்ளியான 99ஐப் பெற்ற யாழ். இந்துக் கல்லூரி தரம் -9ஐச் சேர்ந்த செல்வன் ச.யதுஷனுக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் தங்கப்பதக்கம் அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

## புதுவருஷப் பிறப்புக் கருமங்கள்

### வாக்கியப் பஞ்சாங்கப்படி

சர்வதாரி வருஷம் சித்திரை மாதம் (13.04.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நாடி 27 விநாடி 05 (மணி 4.55) பூருவபக்ஷ நவமித் திதியில் பூச நட்சத்திரத்தின் முதலாம் பாதத்தில் பிறக்கின்றது. அன்று பிற்பகல் நாடி 17 விநாடி 05 (மணி 12.55) முதல் அன்று முன்னிரவு நாடி 37 விநாடி 05 (மணி 8.55) வரை விஷ புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் ஆலிலையும், காலில் இலவமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து சிவந்த பட்டாடையாயினும் சிவப்பு, பச்சை கரையமைந்த புதிய ஆடையாயினும் உடுத்து மாணிக்கம், மரகதம் இழைத்த ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி நறுமலர் சூடி விக்னேசுவரர் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து சூரியனுக்குப் பொங்கல் பூசைகள் செய்து பெற்றார், குரு முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று உற்றார், நண்பர்களுடன் அளவளாவி அறுசுவைகளுடன் சுக்கு, திற்பிலி, மிளகு என்னும் திரிகடுகும் அப்ப வர்க்கமும் சேர்த்தருந்தி தாம்பூலம் தரித்து கண்ணாடி, தீபம், நிறைகுடம் முதலிய மங்கலப் பொருள்களைத் தரிசித்து புதிய வருஷ பலாபலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து அரிய தவத்தால் பெற்ற மானிடப் பிறவியின் செயற்பாலனவற்றை இனிது சிந்தித்து சுகமாக வாழக் கடவர்.

#### கைவிசேஷம்

சித்திரை 2ஆம் நாள் (14.04.2008) திங்கட்கிழமை — பிற்பகல் 2.18 மணி தொடக்கம் 4.10 மணிவரை. மாலை 6.20 மணி தொடக்கம் 7.30 மணிவரை

#### பெரியோர், குரு தரிசனம்

சித்திரை 25ஆம் நாள் (07.05.2008) புதன்கிழமை — மாலை 6.49 மணி தொடக்கம் 8.50 மணி வரை

#### புதுக் கணக்குப் பதிதல்

சித்திரை 25ஆம் நாள் (07.05.2008) புதன்கிழமை — பிற்பகல் 4.45 மணி தொடக்கம் 6.37 மணி வரை

சித்திரை 29ஆம் நாள் (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை — மாலை 6.02மணி தொடக்கம் 6.22 மணி வரை

#### பூமிப் பிரவேசம்

சித்திரை 25ஆம் நாள் (07.05.2008) புதன்கிழமை — மாலை 6.49 மணி தொடக்கம் 8.50 மணிவரை

#### ஏர்மங்கலம், வயல், தோட்டச் செய்கை

சித்திரை 25ஆம் நாள் (07.05.2008) புதன்கிழமை — பிற்பகல் 4.45 மணி தொடக்கம் 6.37 மணிவரை

சங்கிரம தோஷ நக்ஷத்திரங்கள்: புனர்பூசம் 4ஆம் கால், பூசம், ஆயிலியம், அனுஷம், மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் கால், உத்தரட்டாதி இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து தான தரும வழிபாடுகளை விஷேடமாக செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்யக் கடவர்.

### திருக்கணித பஞ்சாங்கப்படி

சர்வதாரி வருஷம் சித்திரை மாதம் 01ஆம் திகதி 13.04.2008 ஞாயிற்றுக்கிழமை மாலை உதயாதி நாழிகை 31-07 மணி மாலை 06-29 இல் சர்வதாரி என்னும் பெயருடைய புதுவருஷம் பிறக்கின்றது. அன்று நட்சத்திரம் பூசம் 2ஆம் பாதம் திதி பூர்வபட்ச நவமி. சித்த யோகம். இது 60 வருட சுற்று வட்டத்தில் 22ஆவது வருஷமாகும். அன்று பிற்பகல் (நாழிகை 21-07) மணி 2-29 தொடக்கம் இரவு (நாழிகை 41-07) மணி 10-29 வரையும் மேட சங்கிரமண புண்ணியகாலம் ஆகும். வருஷம் பிறக்கும் போது உதய லக்கினம் ''துலாம்'' உதயமாகிறது.

| | | | |
|---|---|---|---|
| புதன் 26-57 சுக் 15-03 | சூரி 00-00 | | செவ் 22-35 |
| யுரே 26-37 ராகு 0-53 | புதுவருஷ ஜாதகம் | | சந் 09-41 |
| நெப் 27-21 | | | கே 0-53 சனி 8-02 |
| குரு 27-21 | | லக் 03-01 | |

#### கைவிசேஷம்

சித்திரை 2ஆம் நாள் (14.04.2008) திங்கட்கிழமை — பகல் 12.26 மணி தொடக்கம் 2.02 மணிவரை.

சித்திரை 4ஆம் நாள் (16.04.2008) புதன்கிழமை — காலை 6 மணி தொடக்கம் 7.36 மணிவரை. மாலை 6.24 மணி தொடக்கம் 8 மணிவரை

இப்புண்ணிய காலத்தில் எலரும் சங்கற்ப பூர்வமாக மருத்துநீர் தேய்த்து, தலையில் இலவமிலையும் காலில் விளா இலையும் வைத்து ஸ்நானஞ் செய்து சிவப்பு நிறப் பட்டாயினும் அல்லது சிவப்புக்கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினும் தரித்து மாணிக்கம் சேர்த்து இழைக்கப் பெற்று ஆபரணங்களையணிந்து நித்திய கர்மானுஷ்டானம் முடித்து, கண்ணாடி, தீபம், பூரண கும்பம் முதலிய மங்கலப் பொருள்களைத் தரித்து விநாயகர் முதலிய இஷ்ட குல தேவாராதன தரிசனங்கள் செய்து தத்தம் இல்லங்களில் சூரியனுக்குப் பொங்கல் பூஜை வழிபாடுகள் செய்து பெற்றோர், குரு முதலிய பெரியோர்களை வணங்கி அவர்களின் ஆசி பெற்று இயன்ற தானாதிகள் வழங்கி பிதிர் விரதானுசாரிகள் சிராத்தம் தர்ப்பணம் என்பன செய்து நண்பர்கள், விருந்தினர்களை வரவேற்று சுற்ற மித்திரர்களுடனிருந்து சர்க்கரைப் பொங்கல் வேப்பம் பூ, இஞ்சி, மிளகு முதலியவற்றுடன் அறு சுவை பதார்த்தங்களையும் போஜனஞ் செய்து தாம்பூலமருந்தி சுகந்த சந்தன புஸ்பாதிகளை அணிந்து புதுப் பஞ்சாங்க பலன்களைக் கேட்டு புது வருடத்தில் ஆற்றக்கூடிய நற்கருமங்களை சிந்தித்து மங்களகரமாக வாழ்வார்களாக!

சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்: புனர்பூசம் 4ஆம் கால், பூசம், ஆயிலியம், அனுசம், மூலம், பூராடம், உத்தராட்டம் 1ஆம் கால், உத்தரட்டாதி.

மருத்து நீர்: தாழம்பூ, தாதுமாதுளம்பூ, தாமரைப்பூ, துளசி, வில்வம், அறுகு, பால், கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், மஞ்சள், சுக்கு, திற்பிலி ஆதியவற்றை சுத்த ஜலத்தில் இட்டுக் காய்ச்சிய கஷாயமாகும். பூவகை கிடையாவிடின் அவைகளின் இலை, பட்டை, வேர், கிழங்கு யாதாயினும் உபயோகிக்கலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஏப்.11

கொக்குவில் மத்தி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் கே.ஸி.ஸி. சுற்றுக் கிண்ணத்திற்காக யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

* காலை 8.30 மணிக்கு - யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் வி.க. எதிர் யாழ்ப்பாணம் நியூ ஸ்டார் வி.க.
* பி.ப. 1.30 மணி - தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் வி.க. எதிர் அரியாலை வி.க.

(1-86)

* * *

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று காலை 8.30 மணிக்கு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

15,17,19 வயதுப் பிரிவினர்களுக்கான ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

* * *

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயானமென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

* * *

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்றும் நாளையும் காலை 8 மணி முதல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளது

ஆண்கள், பெண்களுக்கான போட்டிகள் இடம்பெறவுள்ளன.


கோண்டாவில்



திருவருள்மிகு நெட்டிலிப்பாய் பிள்ளையார் திருக்கோயில்

**மஹோற்சவ விஞ்ஞாபனம்- 2008**

**மஹோற்சவ கால விவரம்**

10.04.2008 வியாழக்கிழமை மாலை 4.00 மணி விநாயகர் வழிபாடு, சாந்திகள்
11.04.2008 வெள்ளிக்கிழமை -கொடியேற்றம்
காலை 9.00 மணி வசந்தமண்டபப் பூசை
காலை 10.00 மணிமுதல் 10.30 மணிக்குள் கொடியேற்றம்
13.04.2008 ஞாயிற்றுக்கிழமை- தண்டிகைத் திருவிழாவும்
மாலை 4.55 மணிக்கு சர்வதாரி வருஷப்பிறப்பு விஷேஷபூசையும்
15.04.2008 செவ்வாய்க்கிழமை- கைலாசவாகனத் திருவிழா
18.04.2008 வெள்ளிக்கிழமை -சப்பரத்திருவிழா
19.04.2008 சனிக்கிழமை- தேர்த்திருவிழா
காலை 7.00 மணி வசந்தமண்டபப் பூசை
காலை 9.00 மணி தேரில் அரோகணம்
20.04.2008 ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழா
காலை 8.00 மணி வசந்த மண்டபப்பூசை
காலை 9.00 மணி தீர்த்தம்
21.04.2008 திங்கட்கிழமை- தேரடி வைரவர் பொங்கல்
பகல் 10.00மணி பிராயசித்த அபிஷேகம்
மாலை 3.00 மணி வைரவர் ஆராதனை, தேரடிப்பொங்கல்
22.04.2008 செவ்வாய்க்கிழமை- பூங்காவனம்
மாலை 3.00மணி அபிஷேகம், வெளிவீதி உலா

மஹோற்சவ குரு: சிவாகம கிரியாவித்தகர் சிவஸ்ரீ
**நா.ஹரிஹரசுப்பிரமணியக் குருக்கள்** அவர்கள்
[பிரதமகுரு, நெட்டிலிப்பாய் பிள்ளையார் திருக்கோயில்]

குறிப்பு: 10 நாள்களும் அன்னதானம் நடைபெறும்.

திருவருள்மிகு நெட்டிலிப்பாய் பிள்ளையார் திருக்கோயில், கோண்டாவில். பரிபாலன சபை.



வடமராட்சி, தென்மராட்சி பிரதேசத்திற்கான
யூனியன் அஷ்யூரன்ஸின்
**மாபெரும் வேலைவாய்ப்பு**

**உங்கள் பிரதேசங்களிலேயே எங்கள் நேர்முகத் தேர்வுகள்**

ஆயுள் காப்புறுதி (LIFE INSURANCE)
01. காப்புறுதி ஆலோசகர் (INSURANCE ADVISOR)
02. காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் (INSURANCE DEVELOPMENT OFFICER)
03. ASSISTANT AGENCY DEVELOPMENT MANAGER
04. AGENCY DEVELOPMENT MANAGER

பொதுக்காப்புறுதி (GENERAL INSURANCE)
01. காப்புறுதி ஆலோசகர் (INSURANCE ADVISOR)
02. இளநிலை விற்பனை அதிகாரி (JUNIOR SALES EXECUTIVE)
03. விற்பனை அதிகாரி (SALES EXECUTIVE)

**கல்வித் தகைமைகள்:**
01. G.C.G. O/L கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி (ஆகக்குறைந்தது)
02. காப்புறுதி துறையில் முன்னனுபவம் விரும்பத்தக்கது (ஆனால் முக்கியமல்ல)
03. உயர் பதவிகளுக்கு மேலதிக தகைமைகள் எதிர்ப்பார்க்கப்படும் (ஆயுள் காப்புறுதி- பதவி இலக்கம் 3,4/ பொதுக்காப்புறுதி- பதவி இலக்கம்-3)

**வேலைவாய்ப்பின் மூலம் பெறக்கூடிய நன்மைகள்:**
01. அதி உயர் சம்பளம் பெறக்கூடிய அரிய வாய்ப்பு
02. மொத காலத்தில் அதீத திறமையுடன் வேலை செய்பவர்கள் நிரந்தர வருமான திட்டத்திற்குள் உள்வாங்கப்படுவார்கள்
03. வெளிநாட்டு சுற்றுலாவிற்கான அரியவாய்ப்பினை பெற்றுக் கொள்ளல்
04. இலகு தவணை முறையில் வாகனக் கடன் வசதிகள்
05. வருடா வருடம் விருதுகளைப் பெறும் வாய்ப்பு
06. உங்கள் திறமைகளுக்கு ஏற்ற வகையில் விரைவான பதவியுயர்வுகள்

| வடமராட்சியில் நேர்முகத் தேர்வு நடைபெறும் | தென்மராட்சியில் நேர்முகத் தேர்வு நடைபெறும் |
|---|---|
| இடம்: நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் | இடம் : சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| காலம்: 14.04.2008 திங்கட்கிழமை | காலம்: 15.04.2008 செவ்வாய்க்கிழமை |
| நேரம்: முற்பகல்9.30 மணி | நேரம்: முற்பகல் 9.30 மணி |

**அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்**

பிராந்திய முகாமையாளர்.

(சி/552278)


## முதலாம் ஆண்டுத் திதி



**இராமலிங்கம் சிவபாதசுந்தரம்**

தோற்றம் 15.03.1926 — மறைவு 24.03.2007

தென்புலோலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவபாதசுந்தரம் சென்னையில் தங்கியிருந்தவேளையில் 2007, மார்ச் 24ஆம் திகதி காலமாகி இறுதிக் கிரியையும் நடைபெற்றது. அன்னாரின் முதலாவது ஆண்டுத் திதி இன்று 11.04.2008 இல் நடைபெறுவதை இத்தால் அறியத்தருகின்றோம். மனைவி கனகம்மா சிவபாதசுந்தரம், புதல்வியர் நளினி, சுமதி, புதல்வன் முகுந்தன், மருமக்கள் சுரேஷன், ஜுட் புஷ்பகுமார், பிரியா, பேரப்பிள்ளைகள் துஷாரினி, ஹரினி, நிரூபினி, அனிஸ், கிரிஸ், சகோதரர் கே.ஆர்.தியாகராஜ பிள்ளை (ஜே.பி.)

முகவரி: 24, விசாகா வீதி,
கொழும்பு- 04.
தொலைபேசி: 2559130

## மரண அறிவித்தல்

**இராசையா இராஜேந்திரன்**

[முன்னாள் மாநகரசபை வாகனப்பகுதி பிரதம அத்தியட்சகர்]



242, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவரும்முன்னாள் யாழ்.கொழும்பு மாநகரசபை வாகனப்பகுதி பிரதம அத்தியட்சகருமான இராசையா இராஜேந்திரன் 08.04.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி புஷ்பராணியின் கணவரும் காலஞ்சென்றவர்களான முகாந்திரம் E.P.இராசையாJ.P. அன்னலட்சுமி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் இராஜேஸ்வரன் (ரமணன் - சட்டத்தரணி), அருந்ததி (கணக்காளர் - கனடா), நிருபா, (கனடா), சிவகணேஷன் (நோர்வே) ஆகியோரின் தந்தையாரும் ஜெயரஞ்சனி, ஜெபஜீவி, சிறீகாந்தா, நித்தியானந்தன் ஆகியோரின் மாமனும் அரவிந்தன், நிருத்திகம், ரிஷிகன், நேகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2008) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*242, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(72957)
தகவல்:
மகன்.


புதிய பரிமாணத்தில் புதிய உதயம்
**பாலமகேஸ்வரி ஆரம்பக்கல்வி நிலையம்**
*குளப்பிட்டி வீதி, கொக்குவில்.*
தரம் 1முதல் 5 வரையான வகுப்புகள்
ஆரம்பம்: 11.04.2008
காலை 8.30 மணி
புலமைப் பரிசில், ஆங்கிலம்:
B.S.Theesan
அனுமதிக்கு விரையுங்கள்.
(72991) இயக்குநர்.


## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக ஊழியர்
**சு.கிட்டினன்**
அவர்களின் அன்புத் தந்தை
**வேலன் சுந்தரம்**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.

(சி/552274)

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சகஊழியர்
**த.பார்த்தீபன்**
அவர்களின் அன்புத் தந்தை
**கந்தையா தம்பிராசா**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.

(சி/552273)

ஓம் குக மயம்

**தவத்திரு வே.முருகேசு சுவாமிகள்**
அவர்களின் பதினொராம் ஆண்டு குருபூசை



இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்: நாளை (12.04.2008) சனிக்கிழமை

மேற்படி குருபூசை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் அறுபத்து மூவர் குரு பூசையுடன் நிறைவுபெறும்.

சிறப்பு நிகழ்வாக கவிமணி க.ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்களின் இசைச் சொற்பொழிவு இடம்பெறும்.

சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் குருபூசை தினத்தில் பங்குபற்றி திருவருளையும் குருவருளையும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தவத்திரு வே.முருகேசு சுவாமிகளின்
அடியார் சார்பில்
ஆ.அருணாசலம்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

(சி/552267)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி





| அமரர் இராசநாயகம் ருக்குமணி | | அமரர் சுந்தரம் மகேந்திரம் |
|---|---|---|
| 04*04*1936 | தோற்றம் | 04*07*1963 |
| 09*04*2006 | மறைவு | 08*01*2006 |

திதி: 11.04.2008

ஈராண்டு சென்றாலும் இன்றும் உங்கள் நினைவுடனே வாழுகிறோம்.

*2/2, மருதடி லேன்,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
(72996)
திரு.திருமதி செல்வராசா நாகேஸ்வரி
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு வீதி விபத்துக்களில் 560 பேர் காயம்

## அவர்களில் 18 பேர் உயிரிழந்தனர்

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு 560 பேர் வீதி விபத்துக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

இத்தகவல் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் அதன் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை ஆகியவற்றிலிருந்து திரட்டிய புள்ளி விவரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

வீதி விபத்துக்களினால் காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 79 பேரும், தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் 64 பேரும், சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் 47 பேரும், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் 20 பேரும்,

சுற்றயல்கூறு அச்சுவேலி வைத்தியசாலையில் 14 பேரும், சுற்றயல்கூறு கோப்பாய் வைத்தியசாலையில் 14 பேரும், மாவட்ட வைத்தியசாலை நெடுந்தீவில் 7பேரும், மாவட்ட வைத்தியசாலை ஊர்காவற்றுறையில் 4 பேரும், சுற்றயல்கூறு காரைநகர் வைத்தியசாலையில் 2 பேரும், சுற்றயல்கூறு சங்கானை வைத்தியசாலையில் ஒருவரும், வேலணை கிராம வைத்தியசாலையில் ஒருவரும் சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஆண்டு காலப்பகுதியில் வீதி விபத்தினால் பாதிக்கப்பட்டு 307 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் 18 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் இப்புள்ளி விவரக் குறிப்புக்கள் தெரிவித்தன. (202-300)

# யாழ்.நகரில் புதுவருட வியாபாரம் சூடு பிடித்துள்ளது

குருநகர்,ஏப்.11

யாழ்.நகரில் சித்திரைப் புத்தாண்டு வியாபாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

கொழும்பிலிருந்து வியாபாரிகளல் எடுத்துவரப்பட்ட தைத்த ஆடைகள், துணி வகைகள் யாழ்.நகரிலுள்ள நடைபாதைகளில் குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

யாழ்.நகரில் ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி நடைபாதைகளில் இவ்வியாபாரம் நேற்றுமுன்தினம் தொடக்கம் நடைபெற்று வருவதனால் இவ்வீதிகளினூடான போக்குவரத்து மந்த கதியில் நடைபெற்று வருகிறது. (202-51)

மானிப்பாய் மேற்கில்

# மழையினால் 6,517 பரப்புக் காணியில் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் அழிவு

வலிதென்மேற்கு,ஏப்.11

மானிப்பாய் மேற்கு பிரதேசத்தில் அண்மையில் பெய்த தொடர் கன மழையினால் 6ஆயிரத்து 517 பரப்புக் காணியில் மேற்கொள்ளப்பட்ட மரக்கறிச் செய்கையும் சிறுதானியப் பயிர்ச்செய்கையும் முற்றாக அழிந்துள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளது.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் இப்பிரதேச விவசாயிகளிடமிருந்து பயிரழிவு பற்றிய விவரங்களைத் திரட்டி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குச் சமர்ப்பித்துள்ளது. கீரிமலை விவசாய போதனாசிரியருக்கும் இது பற்றிய விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளால் 6,517 பரப்பளவில் செய்கை பண்ணப்பட்ட எள், பயறு, கௌபி, உழுந்து, மிளகாய், கத்தரி, பூசணி, வெண்டி, வல்லாரை, பொன்னாங்காணி ஆகிய பயிர்கள் முற்றாக அழிந்துபோய் விட்டன.

இதற்கான நஷ்டஈட்டினை - நிவாரணத்தை பெற்றுத் தருமாறு பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை - பயிரழிவுக்குப் பதிலாக தமது காணிகளில் மீள்நடுகை செய்வதற்கு விதைகள் மற்றும் விதை தானியங்கள் இல்லாது விவசாயிகள் மிகவும் சிரமமடைந்து வருகின்றனர்.

தானிய விதைகளைத் தேடி விவசாயிகள் அலைந்து வருவதாகவும் தெரிய வருகின்றது. (202-135)



மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்விற்கு வருகை தந்த விருந்தினர்கள் பாண்ட் வாத்திய சகிதம் வரவேற்று விழா மேடைக்கு அழைத்து வரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.
பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் மாணவர் ஒருவருக்குப் பரிசு வழங்குவதையும் அருகில் மகாவித்தியாலய அதிபர் வி.நடராசா நிற்பதையும் இரண்டாவது படத்தில் காணலாம். *(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

# தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் புதுவருடப் பரிசுத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.11

தேசிய சேமிப்பு வங்கியின் கிளைகளில் புதுவருடப் பரிசாக 15ஆயிரம் ரூபாவும் அதற்கு மேற்பட்ட தொகையும் வைப்பிலிடுவோருக்கு 'அவுறுது வாசனா' சான்றிதழுடன் ஒரு தொகுதி மாபிள் சாப்பாட்டுத் தட்டுகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டம் வங்கிக் கிளைகளில் ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை செயற்படுத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை புதுவருடத்தையொட்டி வங்கிக் கிளைகளில் 15 ஆயிரம் ரூபாவுக்கு குறைந்த தொகையினை வைப்பிலிடுவோருக்கு தொகைக்கேற்ப ரிதிரேகா சான்றிதழும் கைவிசேடமும் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)

# யாழ்.திருமறைக் கலாமன்றம் நடத்தும் கலைஞர் கௌரவிப்பும் கருத்தரங்கும் நாளை

யாழ்ப்பாணம்,ஏப்.11

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடத்தப்பட்ட உலக நாடக தினத்தை சிறப்பிக்கும் முகமாக ஒழுங்குசெய்யப்பட்ட கருத்தரங்கும் கலைஞர் கௌரவிப்பும் நாளை சனிக்கிழமை கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளன.

காலை, மாலை இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ள உலக நாடக தின விழா நிகழ்வுகளில் காலையில் நாடகக் கருத்தரங்கும் மாலையில் கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறும்.

காலை 9.30 மணிக்கு கருத்தரங்கு ஆரம்பமாகும். அதன்போது, 'ஜப்பானிய மரபுவழி அளிக்கைகள் - ஓர் அறிமுகம்' என்னும் பொருளில் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள், திருமதி எ.வைதேகி, திருமதி ஜி.ஜேன் லகுஷா ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகும். இதன்போது திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்பகாலத்திலிருந்து இன்றுவரை அதன் கலைப்பணிகளில் சேவையாற்றி வரும் மூத்த கலைஞர்களில் ஏ.வி.ஆனந்தன், ம.யேசுதாசன், ஜீ.பி.பேர்மினஸ், ம.தைரியநாதன் ஆகிய நான்கு கலைஞர்களும் திருமறைக் கலாமன்றத்திற்கு ஆற்றிய கலைச் சேவையைப் பாராட்டி மன்றத்தின் அதிஉயர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

கௌரவிப்பு நிகழ்வினைத் தொடர்ந்து கோவலன் - கண்ணகி, சத்தியவான்- சாவித்திரி, சிறிவள்ளி, சாகாத மனிதம் ஆகிய நாடகங்களிலிருந்து நிகழ்த்திக் காட்டுகையும் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (202)

# தென்மராட்சி வலய ஆசிரியர்களுக்கு வாண்மை விருத்திச் செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.11

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான ஆசிரிய வாண்மை விருத்திச் செயலமர்வுகள் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை மட்டத்தில் செயல்நிலை ஆய்வுச் செயற்றிட்டம் நிறைவேற்றுவதற்கான வழிகாட்டல் செயலமர்வு எதிர்வரும் 15ஆம் திகதியும் -

புதிய முகாமைத்துவக் கருத்துகளும் அவற்றினைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் பயன்படுத்தலும் செயலமர்வு எதிர்வரும் 17ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இந்தச் செயலமர்வுகளில் பங்குபற்றும் ஆசிரியர்களின் நலன்கருதி கொடிகாமம், பருத்தித்துறை ஆகிய இடங்களிலிருந்து போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்தார். (202-207)




# பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கூடைப்பந்தாட்ட மைதானம்

வலி.தென்மேற்கு,ஏப்.11

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 2007 வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிமூலம் அமைக்கப்பட்ட கூடைப்பந்தாட்ட மைதானத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

அதேவேளை - இப்பாடசாலையில் கல்வியமைச்சின் எஸ்.ஈ.எம்.பி. திட்டத்தின் கீழ் எட்டு லட்சம் ரூபா நிதிமூலம் நிர்மாணிக்கப்பட்ட தண்ணீர்த்தொட்டியின் கட்டட வேலைகளும் பூர்த்தியடைந்துள்ளன. (202-135)

# பிரச்சினைகள், கஷ்டங்கள் பல ஏற்படினும் கல்வி நடவடிக்கைகளில் சோர்வு கூடாது

## யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கருத்து



வலி.தென்மேற்கு,ஏப்.11

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள், கஷ்டங்கள் ஏற்படினும் கல்வி நடவடிக்கைகள் சோர்ந்து விடக்கூடாது. அதற்காக யாழ். மாவட்ட செயலகத்தின் ஊடாக கல்விக்கான உதவிகள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடாநாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் மதியநேர உணவை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயம் மற்றும் இடம்பெயர்ந்த பாடசாலையான மாதகல் நுணசை வித்தியாலயம் ஆகியவற்றின் வருடாந்த பரிசளிப்பு விழா, நிறுவுநர் தினம் ஆகியவற்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் வி.நடராசா தலைமையில் அண்மையில் நடைபெற்ற இவ்விழாவில் அரசாங்க அதிபர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

எமது மாவட்டத்தில் அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு போதுமான டாக்டர்கள் இல்லை என்று கூறப்படுகின்றது. இம்மாவட்டத்தில் உயர்கல்வித் தராதரம் பெற்ற மாணவர்கள் எந்தத் துறையாக இருந்தாலும் இந்த மண்ணுக்கு, தமது பிரதேசத்திற்கு பணிபுரிய முன்வரவேண்டும். மற்றவர்களின் அழுத்தம் எதுவும் இல்லாமல் தாமாகவே எமது மண்ணில் கடமையாற்ற முன்வரவேண்டும். குறிப்பாக வறிய நிலையில் இருந்து படித்து உயர் கல்வியில் முன்னேற்றம் காண்பவர்கள் வறிய மக்களுக்காக சேவையாற்றவேண்டியதும் அவசியம்.

காலம் பொன்னுக்குச் சமன். இது ஒவ்வொரு மனிதனுக்கும் பொருந்தும். கல்வி என்பது எமது சொத்து. எத்துணை கஷ்டங்கள் வரினும் அது முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும். கல்வியைப் பெற்று விட்டால் மட்டும் போதாது. கல்வியின் நோக்கங்களை மாணவர்கள் அறிந்து செயற்படவேண்டும். தமது ஒழுக்கத்தையும் இவர்கள் மேம்படுத்தவேண்டும்.

மாணவர்களில் பலர் கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய முக்கிய பாடங்களில் சரியான பெறுபேறுகளைப் பெறுவ தற்குத் தவறிவிடுவதாக அறியப்படுகின்றது. இந்த இரண்டும் இல்லாததினால் பல மாணவர்களின் உயர்கல்வி பாதிக்கப்பட்டு வருகின்றது. இதனால் உயர்கல்வியில் யாழ்.மாவட்டத்திற்கு கிடைக்கும் வாய்ப்புளும் பாதிக்கப்படும் நிலை ஏற்படுகின்றது - என்றார்.

இவ்விழாவில் நிறுவுநர் தின உரையை மாதகல் பங்குத்தந்தை அருட்திரு.ஏ.சி. கிறிஸ்தோப்பர் அடிகளார் நிகழ்த்தினார்.

சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், சண்டிலிப்பாய் கோட்ட கல்விப்பணிப்பாளர் சி.கந்தசாமி, கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட விஞ்ஞான பொறியியல் கலாநிதி ச.கனகசபை, வைத்திய கலாநிதி திருமதி சிவபாதநாயகி கனகசபை ஆகியோரும் இவ்விழாவில் உரையாற்றினர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (202-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேபிள் தொலைக்காட்சி இணைப்பாளர்களுக்கு ஓர் அன்பான உரிமையான வேண்டுகோள்

தமிழன் தொலைக்காட்சி ஒளிபரப்பில் ஞாயிறு தோறும் இரவு 11 மணிக்கு **டாக்டர் பஸ்லூர் ரஹ்மான்** அவர்களினால் வழங்கப்படுகின்ற மருத்துவ நிகழ்ச்சியை உங்கள் இணைப்பினூடாக வழங்கி மகத்தான ஈடு இணையில்லாத சேவையைச் செய்து கொள்ளுங்கள்.

உங்களுக்கான இணைப்பை இணைப்பாளர்களிடம் நேரில் அணுகி கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

கீழ்வரும் விடயங்களை **ஆழமாக ஊன்றிக் கவனித்துக் கொள்ளுங்கள்.**

* "காய்ச்சல்" வெவ்வேறு பல வகையான பெயர்களில் (மலேரியா, நிமோனியா, அமோனியா, சின்குன்குனியா, டெங்குக்காய்ச்சல், நெருப்புக்காய்ச்சல், மூளைக்காய்ச்சல், பறவைக்காய்ச்சல்) இனிமேல் கண்டுபிடிக்கப் போகும் எத்தனையோ விதமான காய்ச்சல்கள் கூறப்படுகின்றன.
* "காய்ச்சல்" என்ற ஒரே வகைக்குள் எல்லாமே அடங்குகிறதா? அல்லது உண்மையில் பல வகையா? "எதிர்பாருங்கள், எதிர்கொள்ளத் தயாராகுங்கள்" புதுவகை வைரஸ் கிருமியை என்ற விளம்பரங்கள் வெளிவரத் தொடங்கி விட்டன. இவற்றுக்கு சரியான விளக்கம் பெற **டாக்டர் பஸ்லூர் ரஹ்மான்** கூறுவதைக் கேளுங்கள்.
* **நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்** வலிப்பு, ஆஸ்மா, நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற **தொடர்ச்சியான மருந்து பாவனையிலுள்ள** நோயாளிகளின் ஆரம்பக் கட்டத்தில் ஓரளவு தெம்பாக இருப்பார்கள். காலம் செல்லச் செல்ல அவர்களின் தெம்பும், உற்சாகமும் குறைந்து கொண்டு போய் இறுதியில் **விரக்தியின் விளிம்பில் வந்து மனமும் உடலும்** பாதிக்கப்படுவதை நீங்கள் அவதானித்துக் கொள்ளுங்கள். இதுவரை அவதானிக்காவிட்டால் இனிமேல் **புதிய நோயாளிகளில் அவதானிக்கத் தொடங்குங்கள்**
* **"கட்டுப்படுத்துகிறோம்"** என்ற பெயரில் போடப்படும் **மருந்துகள்** கட்டுப்படுத்துவது நோயையா? அல்லது நோய் அறிகுறியையா?

நோய் அறிகுறிகளை **தொடர்ச்சியாக** மருந்துகள் மூலம் அமுக்குவதன் மூலம் எங்களை **உயிரோட்டமாக வழி நடத்தும் "உயிர்ச்சக்தி"** குறைந்து செல்வதன் விளைவுதரன் மேற்கூறிய விளைவு.

Dr.க.ரகுராம்,
உரும்பிராய் வடக்கு (மடத்தடி).

(72697)

## மாணவர்களுக்கு கொமர்ஷல் வங்கி உதவி

யாழ்ப்பாணம், ஏப்.11

கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளையினர் கைதடி கலைவாணி வித்தியாலய மாணவர்களுக்குகுடிநீர்ப் போத்தல்களை வழங்கியுள்ளனர்.

கிளை முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் தலைமையில் சென்ற வங்கி உத்தியோகத்தர்கள் மாணவர்களுக்கு குடிநீர்ப் போத்தல்களை வழங்கியதாக வித்தியாலய அதிபர் தெரிவித்தார்.

(202-207)

## பெரிய புராண படனப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.11

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகிய வகுப்பு மாணவர்களிடையே பெரிய புராணப் படனப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரிவுக்கும் தலா ஒரு மாணவர் வீதம் பங்குபற்றலாம்.பங்குபற்றும் மாணவர்களின் விவரங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கேட்டுள்ளார்.

## சங்கானையில் சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

சங்கானை,ஏப்.11

சங்கானை மத்தி கிராம அலுவலர் பிரிவில் பிளாக் வீதியில் சட்டவிரோதமான மின்சாரப் பாவனை அதிகரித்துள்ளது.

இதனால் அயலில் உள்ள மின்பாவனையாளர்கள் சீரான மின்சாரத்தைப் பெறமுடியாமலுள்ளதோடு, தமது மின் உபகரணங்களைப் பாவனை செய்ய முடியாத நிலைக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இதுபற்றி சித்தன்கேணியில் உள்ள மின்சார சபை அலுவலகத்திற்கும் தெரியப்படுத்தி உள்ளதாகவும் பாவனையாளர்கள் கூறுகின்றனர். (202-29)


ஓர் புதிய ஆலம் விழுது

ஆலமரத்தின் பலம் அதன் விழுதுகளில்
வியாபார நிறுவனத்தின் பலம் அதன் கிளைகளில்
எமது பலம் வாடிக்கையாளர்களாகிய உங்களில்
ஆம்! புதிய விழுதாக நெல்லியடியில் எமது கிளை

INVITATION
Headed by an Indian Engineer
Genuine for Real Warranty
We cordially invite
you and your circumstances
for the occasion of
OUR NEW BRANCH
opening ceremony
On 11-04-2008 Friday at 09:45am

WE ARE NOT BIG BUT THE BEST
Persons with Technically Qualified
UNIT
Central school Road,
Nelliady, Karaveddy.
மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720, 2228844

MEGA OFFER
புதிய கிளை மற்றும் வருஷப்பிறப்பை முன்னிட்டு

| | | |
|---|---|---|
| **UNISTA**<br>Intel Celeron D 1.6 Ghz<br>AsRock/MSI Main Board<br>256Mb DDR1/512 DDR2 Memory<br>40 Gb HDD<br>CDROM<br>ATX Case with SMPS<br>15 Samsung Monitor<br>Keyboard<br>Mouse<br>39,900/- | **UNISTA1**<br>Intel Celeron D 1.6 Ghz<br>AsRock/MSI Mother Board<br>17" Samsung/Intex Flat Monitor<br>ATX Case with SMPS<br>512 Mb Memory<br>80 Gb HDD<br>Combo DVD/CD-RW<br>Keyboard<br>Mouse<br>Speaker & UPS<br>53,900/- | **UNISTA2**<br>Intel Celeron D 1.6 Ghz<br>Asus Mother Board<br>1 Gb Memory<br>160 Gb HDD<br>DVD-RW<br>ATX Case with SMPS<br>15 LCD Monitor<br>Keyboard<br>Mouse<br>Speaker & UPS<br>67,900/- |
| **UNIDUAL**<br>Intel Pentium Dual Core 1.8Ghz<br>AsRock/MSI/Foxconn M Board<br>512 Mb Memory<br>80 Gb HDD<br>Combo<br>ATX Case with SMPS<br>15 Samsung Monitor<br>Keyboard<br>Mouse<br>48,900/- | **UNIDUAL1**<br>Intel Pentium Dual Core 18Ghz<br>Asus/Intel Main Board<br>1 Gb DDR2 Kingston Memory<br>80 Gb HDD<br>DVD-RW<br>ATX Case With SMPS<br>17" Samsung / Intex<br>Keyboard<br>Mouse<br>Speaker& UPS<br>60,900/- | **UNIDUAL2**<br>Intel Pentium Dual Core 18Ghz<br>Asus/Intel Main Board<br>1 Gb DDR2 Kingston Memory<br>160 Gb HDD<br>DVD-RW<br>ATX Case With SMPS<br>15" LCD<br>Keyboard<br>Mouse<br>Speaker& UPS<br>71,900/- |
| **UNICORE**<br>Intel Core 2 Duo 2.0/2.2 Ghz<br>AsRock/MSI/Foxconn M Board<br>512Mb DDR2 Memory<br>ATX Case with SMPS<br>15 Samsung Monitor<br>80 Gb HDD<br>DVD-RW Sony<br>Keyboard<br>Mouse<br>59,900/- | **UNICORE1**<br>Intel Core 2 Duo 2.0/2.2 Ghz<br>AsRock/MSI/Foxconn M Board<br>1Gb DDR2 Memory<br>ATX Case with SMPS<br>17 Samsung Monitor<br>80 Gb HDD<br>DVD-RW Sony<br>Keyboard<br>Mouse<br>Speaker & UPS<br>72,900/- | **UNICORE2**<br>Intel Core 2 Duo 2.0/2.2 Ghz<br>Asus / Intel Original<br>1Gb DDR2 Memory<br>160 Gb HDD, DVD-RW<br>ATX Case with SMPS<br>15" LCD<br>Keyboard-a4tech mini<br>Mouse<br>Speaker<br>UPS<br>83,900/- |
| **IBM Lenovo A55 ThinkCenter**<br>Intel Pentium Dual Core 1.8Ghz<br>IBM Traded Intel 946 MainBoard<br>IBM 512 Mb DDR2 Memory<br>IBM ATX LGA Case with SMPS<br>IBM 17 CRT Monitor<br>IBM 80 Gb HDD<br>IBM Combo<br>IBM Usb Keyboard<br>IBM Usb Mouse<br>IBM 1.44 FDD<br>77,500/- | **HP Pavillion**<br>Intel Pentium Dual Core 1.8 Ghz<br>HP Traded Intel Main Board<br>HP 512Mb Memory<br>HP ATX LGA Case with SMPS<br>HP 17" Perfect Flat Monitor<br>HP 80 Gb HDD<br>HP Combo<br>HP Keyboard<br>HP Mouse<br>69,500/- | **UNISPL**<br>Intel Core 2 Duo 2.0/2.2<br>Intel Classic Dv3 Main Board<br>2Gb DDR2 Memory, 160 Gb HDD,<br>DVD-RW, Combo, 17" LCD, ATX<br>Case, 256Mb VGA, PCTV Cap<br>Higher End Scanner<br>Keyboard-Multi media<br>Mouse<br>Woofer<br>UPS<br>139,900/- |

Purchase One & Get Free One
Each 10,000/- Purchase
Get 1Gb Flash Free
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு
பொருளுடனும்
3 Years Replacement/ Service Warranty
குடாவில் எங்குமில்லாத விலையில்
FREE
With Each Pcs
1/2/4 Gb FlasH
/UPS/
/TABLE/
/PrinteR/
/Pc TV caP/
ScanneR
ஒவ்வொரு கணினியுடனும்
FREE
Order 10 Pcs Get 1 Free

UNIT
மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720, 2228844
Central school Road,
Opp to BUS Stand
Nelliady, Karaveddy.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருவிழாக் காலத்தில் அறுவடை செய்யக் கூடிய வகையில் சோளத்தைப் பயிரிட்டால் போதிய சந்தைவாய்ப்புக் கிடைக்கும்

சோளப் பொத்திகளை திருவிழாக் காலங்களில் அறுவடை செய்யக் கூடியதாக பயிரிட்டால் பெருமளவில் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

"தானியங்களின் அரசி" என்று அழைக்கப் படும் சோளம் உலகத்தின் விவசாய பொருளாதாரத்தின் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் மிகப் பிரதான இடத்தைப் பெற்று வந்துள்ள தானியப் பயிராகும். இது மனிதரது உணவாகவும் அதே நேரத்தில் பெருமளவு கால்நடை உணவாகவும் பாவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திற்கான தரை வழியான ஏ-9 பாதை மூடப்பட்டதன் பின்னரான காலத்திலேயே யாழ்.விவசாயத் திணைக்களத்தால் விவசாயிகளின் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டு பயிரிடப்பட்டு வரு


முதிர்ந்த சோளப் பொத்தி

கின்றது. அதற்கு முன் இறக்குமதிப் பொருளாகவே இருந்துவந்தது.

சோளம் பச்சைப் பொத்தியாகவும் தானியமாகவும் அறுவடை பண்ணப்பட்டு வருகின்றது. பச்சைப் பொத்தியாக அறுவடை செய்வது லாபகரமானதென ஒப்பீட்டு ரீதியில் விவசாயிகளினால் கருதப்பட்டு வருகின்றது. ஆனால் இது தானியமாகவும் பொத்தியாகவும் பயிரிடப்படுவதே பொருத்தமானதாகும். கோவில் திருவிழா காலங்களில் பொத்திகளை அறுவடை செய்யக் கூடியதாக இங்கு இந்தப் பயிரைச் செய்கை பண்ணுவதன் மூலம் இலகுவான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் பொதுமக்களுக்கு சத்துணவை வழங்குவதாகவும் அமையும்.

இவ்வாறு தெரிவித்தார் விவசாய பணிமனையின் விவசாய விரிவாக்கல் கண்காணிப்பு உத்தியோகத்தர் திருமதி கி.சிவதீபன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சோளப் பயிர்ச் செய்கையின் அறிமுகம் விவசாயத் திணைக்களமும் 'வேல்ட் விஷன்' நிறுவனமும் இணைந்து உருவாக்கிய கருத் திட்டத்தின் ஊடாக (2007/2008) விரிவு படுத்தப்பட்டுள்ளது.

விவசாய விதைகள் மற்றும் அதற்கான இரசாயனங்கள் வழங்கப்பட்டு 345 ஹெக்டேயரில் சோளம் பயிரிடப்பட்டது. தொடர்ந்து நியாப் II கிராமத் திட்டப் பயனாளிகளையும் உள்வாங்கி சோளம் வெற்றிகரமாகப் பயிரிடப்பட்டு வருகின்றது. ஏறக்குறைய 100 ஹெக்டேயரில் பயிராகியுள்ளது. பயிர் அறிமுகத்தோடு தானியத்தின் போசனைப் பெறுமானம், சந்தைப்படுத்தும் முறைமை, ஆக்கக்கூடிய உணவுப் பண்டங்கள் தொடர்பான வழி காட்டுதல்களையும் அறிமுகப்படுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

சோளத்தில் நெல் அரிசியில் இருந்து பெறப்படும் புரதம், விற்றமின் சத்துக்களிலும் பார்க்க அதிகமாகப் பெறலாம். காபோவைதறேற் சம அளவானதாகும்.

சோளத்தைப் பச்சைப் பொத்தியாகவும் தானியமாகவும் உற்பத்தி செய்து விற்பனைக்கு விடலாம்.

**பச்சைப் பொத்தி**

நான்கு பரப்புக் காணியில் பச்சைப் பொத்தி பயிரிடப்படும் பொழுது சுமார் நாலாயிரம் முதல்தரமான பொத்திகளையும் 1500 இரண்டாம் தர பொத்திகளையும் அறுவடை செய்யலாம். இவை முறையே 10 ரூபாவிற்கும் 8 ரூபாவிற்கும் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகின்றது.

விற்பனை மூலம் 52 ஆயிரம் ரூபாவை பெறும் பொழுது உற்பத்திச் செலவாக 15 ஆயிரம் ரூபா முதலீடு செய்திருக்க வேண்டும். இந்த வகையில் நிகர லாபமாக 35 ஆயிரம் ரூபாவிற்கு மேலாக பெறக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது.

இது பொத்திகள் அனைத்தும் விற்பனையாகும் என்ற எடுகோளின் அடிப்படையிலானதாகும். இதற்காக சோளப் பாவனையை ஊக்குவிக்கும் செயற்திட்டங்கள் விரைவு படுத்தப்பட்டு வருகின்றன.

அவித்த சோளப் பொத்திகளை திருவிழாக்கள், உற்சவங்கள், விளையாட்டு போட்டிகள் என்பவற்றில் விற்பனை செய்வதற்கும் பாடசாலை மாணவர்களுக்கு மதிய வேளைச் சத்துணவாக வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இடையில் பச்சைப் பொத்தி பாவனை பற்றி கருத்துத் தெரிவித்த விவசாயப் பிரதிப் பணிப்பாளர் கூறியதாவது:-

அண்மையில் நடந்த மட்டுவில் அம்மன் ஆலயத் திருவிழாவின் போது அந்த ஆலயச் சூழலில் அவித்த சோளப் பொத்தி


பச்சைப் பொத்திப் பருவம்

களின் விற்பனை அமோகமாக இருந்ததாக தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கப்பட்டதாவது:

கால் நடைகளுக்கு பச்சைப் பொத்தியைத் தீவனமாகக் கொடுக்கும் பொழுது அவற்றின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப் படுகின்றது.

**தானியமாக உற்பத்தி செய்தல்**

இதே அளவான நிலப்பரப்பில் 4 பரப்பு




பொத்திகளை முதிர்பருவத்தில் அறுவடை செய்து தானியமாக பிரித்தெடுக்கும் பொழுது 400 கிலோ தானியத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இயந்திரத்தின் மூலமாகவோ கைகளினாலோ தானியங்களை பிரித்தெடுக்க வேண்டும். தற்போது 60 ரூபாவிற்கு கிலோ கமக்காரரிடம் இருந்து கொள்வனவு செய்யப்படுகின்றது.

தானியமாக அறுவடை பண்ணுவதற்கு முதலீடு சற்று அதிகமாகும். 18 ஆயிரம் ரூபா தேவைப்படும் (400X60-18000) 6 ஆயிரம் ரூபாவை நிகர லாபமாக கருதலாம் விலை தளம்பல் அடைவதை பொறுத்து வருமானம் வேறுபடும். தற்பொழுது 60 ரூபாவிற்கு விசாயிகளால் விற்பனை செய்யா விட்டாலும் கடந்த பெப்ரவரி மாதம் விவசாயிகளிடமிருந்து 70 ரூபாவிற்குக் கொள்வனவு செய்யப்பட்டு வியாபாரிகளால் 90 ரூபாவிற்கு விற்பனை செய்யப் பட்டது (சில்லறை விலை) 2007 டிசெம்பர் மாதத்தில் ஒரு கிலோ சோளம் 120 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது.

**விதைத் தானியத் தயாரிப்பு**

விதைக்குரிய தானியம் வீரியமான முதிர்ந்த பொத்திகளில் இருந்து பெறப்படுகிறது. நடுப்பகுதியில் உள்ள தானியங்களை இதற்காக பிரித்தெடுக்க வேண்டும். பொத்தி முழுவதும் விதை தெரிவிற்கு பயன்படுத்துவதில்லை. விதைத்தானியம் தரமானதாகவும் சற்று விலை அதிகமானதாகவும் இருக்கும்.

சோளத்தை வர்த்தக நோக்கில் பயிரிடும் பொழுது பயிர்ச்செய்கையில் உறுதிப்பாடும் பேணப்படவேண்டும். முழுதாக பச்சைப் பொத்தியாகவோ தானியமாகவோ அறுவடை செய்வது லாபகரமானதாகவோ நிரந்தரமானதாகவோ அமையாது.

விவசாயத் திணைக்களத்தின் சிபார்சிற்கு அமைவாக 50 வீத உற்பத்தி பச்சைப்பொத்தியாகவும் 50 வீதம் தானியமாகவும் அறுவடைசெய்யும் பொழுது சமநிலை பேணப்படுவதுடன் கணிசமான லாபமும் கிடைக்கும் விதைத் தானியத்தை நாமே உற்பத்திசெய்து தென்னிலங்கையை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இருக்காது.

**அறுவடைக்காலம்**

இளம் பொத்திகளை 65-70 நாள்களில் அறுவடை செய்யவேண்டும். மடல் பச்சை நிறமாகவும் கூந்தல் இளம் கபில நிறமாகவும் இருக்கும். கூந்தல் காயாத நிலையில் இருக்கும்.

**சந்திப்பு : கை.பேரின்பநாயகம்**

பொதுவாக 80 - 85 நாள்களில் தானியமாக அறுவடை செய்யலாம். மடல்கள் காய்ந்து மஞ்சள் நிறமாகவும் கூந்தல் காய்ந்து கபில நிறமாகவும் இருக்கும்.

எனினும் இங்கு அதிகமாக பயிரிடப் படும் பதிவு செய்யப்பட்ட ரூவான் இனம் முதிர 105-110 நாள்கள் ஆகும். பொப்கோன் இளம் பரீட்சார்ந்த நிலையிலேயே உள்ளது. ரூவான் இனத்திலும் பார்க்க பொரியலுக்கு இது அதிக பொருத்தமானது. ரூவான் பொரியலுக்கு அதிகம் பொருந்தாதெனினும் கச்சானுடன் பாவிக்கப்பட்டு வருகிறது.

சந்தைப்படுத்தும் பொழுது வியாபாரிகளுக்கு அல்லது நுகர்வோருக்கு நேரடியாக வழங்கல் செய்வது விரும்பத்தக்கது. இடைத்தரகரால் பச்சைப் பொத்தி விலை அதிகரித்துள்ளது.

**கால்நடைத் தீவனமாக...**

பச்சைப் பொத்திகளை கால்நடைத் தீவனமாக வழங்குவதால் உற்பத்தித் திறனை அதிகரிக்கலாம். அத்துடன் சைலோச்(Silage) கால்நடைத் தீவனத்தை சோளக் கழிவில் இருந்து தயாரித்து வழங்க முடியும்.

இதில் இருந்து உருவாகும் நல்ல மணம் ஆடு, மாடுகளுக்கு ஒரு தூண்டியாக செயற்படுவதுடன் ஊட்டத்தன்மையை அதிகரித்து செரிமான திறனையும் மேம்படுத்தும்.

தண்டு, தடல் பகுதிகளை 6 அங்குல துண்டங்களாக்கி இதற்கென தயாரித்த கிடங்குகளில் இட்டு மூடித் தயார்பண்ணலாம். மேலதிக தகவலை பெற விவசாயத் திணைக்களத்தோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளவேண்டும்.

தானியத்தை குறுணலாக்கி கோழிகளுக்கு பாவிப்பதுடன் வேறு தானியங்கள், கனிப்பொருள்களுடன் சேர்த்து அரைத்து, 'மாஸ்' தயாரிக்கலாம்.(கால்நடை வைத்திய பிரிவோடு தொடர்பு கொள்ள வேண்டும்) என மேலும் தெரிவிக்கப்பட்டது.

## வடமராட்சியில் அடிக்கடி ஆங்காங்கே மழை; புகையிலையை உலர்த்த முடியாது சிரமம்

வடமராட்சி,ஏப்.11

வடமராட்சிப் பிரதேசத்தில் அடிக்கடி ஆங்காங்கே திடீர் திடீரென மழை பெய்வதால் அறுவடை செய்யப்பட்ட புகையிலையை உலர்த்துவதில் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் புகையிலை அறுவடை மிகவும் மும்முரமாக தற்போது நடைபெற்று வருகின்றது.

அண்மையில் பெய்த தொடர் மழையினால் புகையிலைக் கன்றுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் புகையிலைக் கன்றுகளை நியாய விலைக்கு விவசாயிகளினால் விற்பனை செய்ய முடியவில்லை.

தற்போது ஒரு புகையிலைக் கன்று 30 ரூபா தொடக்கம் 65 ரூபா வரை விற்பனையாகிறது. புகையிலையை உலர்த்தி விற்பனை செய்வோர் புகையிலைக் கன்றுகளை வாங்கி வெட்டி உலர்த்தி போட்டுள்ளனர்.

இந்நிலையில் ஆங்காங்கே மழை அடிக்கடி பெய்து வருவதால் புகையிலை அழுகி வருவதுடன் அவற்றை உலர்த்த முடியாத சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

(202-236)





வல்வெட்டித்துறை அறவழி தொழில் பயிலகத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளை முகாமையாளர் எஸ்.கிருஷ்ணானந்தன் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் -

நிகழ்வின் பிரதம விருந்தினரான கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் பயிலகத்தை நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் அருகில் வல்வை முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு தண்டபாணிகதேசிகர், கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவையாளர் ஜே.திருநீபன் ஆகியோர் நிற்பதையும் இரண்டாவது படத்திலும் காணலாம். விருந்தினர்கள் தொழிலகத்தைப் பார்வையிடுவதை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள் : சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2007 - ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் குடாநாட்டு மாணவர்களின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.11

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகள் அண்மையில் யாழ்.மாவட்டத்தில் வெளியாகின.

குடாநாட்டில் உள்ள - அந்தந்தப் பாடசாலைகளின் - அதிபர்களால் 'உதயனுக்கு' வழங்கப்பட்ட பரீட்சை முடிவுகளில் சில வருமாறு:-

**புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை**

இ.வினோத் 3ஏ2பி4சிஎஸ், த.சிந்துஜா - 3ஏ4சி3எஸ், வி.ரங்கநாதன் - 2ஏபி3சி3 எஸ்.

**கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி**

ஏ.ஜீவராஜ் -9ஏபி, கே.அனித்தா-7ஏ 3பி, என்.சோபிகா -7ஏ2பிசி, வி.இந்துமதி - 6ஏ2பிசிஎஸ், கே.சிவகௌரி - 6ஏ2பிசி எஸ், ஜே.ஜெயசுகந்தினி - 5ஏ2பி3சி, ஆர்.சரணியா - 5ஏபி2சி2எஸ், வி.அம்பிகைசீலன் - 4ஏ2பி2சி, பி.நிவேதன் - 3ஏ2பி3சி2எஸ், என். ஜெயக்குமார் - 2ஏ3பி4சி.

**மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்**

தி.அஜந்தன் - 9ஏபி, ம.மதுசாளினி - 8 ஏபிஎஸ், ஞா.கிருஷாந்தி - 6ஏ2பி2சி, சி.சரண்யா - 5ஏ2பி2சிஎஸ், கி.மங்களதீபா - 4ஏ4பி சிஎஸ்.

**ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்**

பா.அங்குசன் - 10ஏ, மா.ரேகாதீபன் - 9ஏசி, செ.அஜனன் - 6ஏ2பிசிஎஸ், சி.ஜெயபாலசர்மா - 6ஏ4சி, செ.தீவிகா - 5ஏ5பி, ரா.சௌமியா - 5ஏ2பி3சி, க.எழில்வதனி - 5ஏ2பிசி2எஸ், த.அஜந்தினா - 5ஏ2பி2சி, இ. கஜனி - 4ஏ4பி2எஸ், அ.ஆர்த்திகா - 4ஏ5 சிஎஸ், கு.அபர்ணா-4ஏ4சி2எஸ், ப.தனுஷியா -4ஏ2பி3சி, கு.சிந்துஜா -4ஏபி4சி, த.பானுஜா - 4ஏ3சி2எஸ், ரா.வினோ ஜா - 3ஏ 2பி2சி3எஸ், அ.கஜனி-3ஏ3பி2சிஎஸ், தெ.கீர்த்திகா-3ஏபி3சி2எஸ், கி.தயாளநிதி- 2ஏ2 பி2சி4எஸ், ரா.பானுஜா - 2ஏ2பிசி5 எஸ், அ.லக்சனா - 2ஏ4சி3எஸ், ஸ்ரீ.பத்மக ரன் - ஏ7பி2சி, பா.லகுபரன் - ஏ3 பி3சி3எஸ், த. நிஷாந்தன்-ஏபி5சி2எஸ், ஆ.யசிதா - ஏ பி4சி3எஸ், உ.ரயிலா-ஏபி3சி3எஸ், பு. மிரோஜன்-ஏ4சி4எஸ், இ.டினேஸ் - ஏ5சி2 எஸ், பா.விதர்சன்-2பி2சி5எஸ், வ.வனிதா- 2பி 4சிஎஸ்.

**பாஷையூர் சென் அன்ரனிஸ் றோ.க.ம.வித்தி.**

ம.லக்ஸ்ரலா - 7ஏ2பிஎஸ், அ.மேரிஆன் யூலின் - 6ஏ3பிஎஸ், ஏ.மேரிஎட்றீசியா - 5ஏ பி4சி, க.மேரிசரோணா -3ஏ5பிசி, அ.சுஜித்தா - 2ஏ2பி2சி3எஸ்.

**வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி**

செ.தர்சிகா - 10ஏ, து.வைஸ்ணவி - 10ஏ, தி.மேகலா - 10ஏ, சு.அஜிதரன் - 9ஏபி, ப.கிசோஜினி - 8ஏ2பி, ஜெ.றொசல் தேவசாகாயம் - 8ஏபிசி, ப.டர்ஷன்-7ஏ3பி, பு.தபோதரன் - 7ஏ 2பிசி, தி.சேந்தன் - 6ஏ4பி, ரூ.ரூபனா - 6ஏ4பி

ய.சுந்தர்ராம் - 6ஏ3பிஎஸ், உ.நிவேதா - 6ஏ3பிசி, சா.திருமகள் - 6ஏ3பிசி, ச.கஜமினி - 6ஏ3பிசி, ப.திலக்ஷனா - 6ஏ2பி2சி, யோ. சிந்துஜா - 6ஏ2பிசி, மு.கம்சத்வனி - 5ஏ4பி எஸ், செ.தயாளன் - 5ஏ4பிசி, தி.ஜீவிதா - 5ஏ3பிசிஎஸ், ப.வேணுகரன் - 4ஏபி5சி,

வே.பவபரன் - 4ஏபி4சி, வி.ஜோர்ஜ் டெனஸ்ரன் - 3ஏ2பி5சி,வ.கஜந்தினி- 3ஏ6 பிசி, ச.தனானந் - 3ஏ 5பி2சி, இ.துஸ்யந்தி - 3ஏ5பி2சி, செ.ஜான்சன் - 3ஏ4பி3சி, நி.பிரசாந்தன் - 3ஏ4பி2சி, எஸ், சூ.சுஜனி - 3ஏ3பி 3சிஎஸ், ப.திலகராஜன் - 3ஏ3பி3சி, ப.மிருனா -3ஏ3பி2சி2எஸ்.

சி.விஜிதரன் - 3ஏ2பி4சிஎஸ், தே.தமயந்தி - 3ஏ2பி4சிஎஸ், த.முரளிவாசன் - 3ஏபி3சி 2எஸ், இ.செல்வின் லொய்ட்-3ஏபி5சி எஸ்.

**சன்மார்க்க மகா வித்தியாலயம்**

சி.ரேணுஜா -4ஏ3பி3சி, க.தனுசா-4ஏ பி2சி3எஸ், இ.தாரணி - 3ஏ2சி5எஸ், ச.கிருஷாந்தினி - 2ஏபி2சி5எஸ், நி.சோனியா - 2ஏ5சி2எஸ், தி.சாம்பவி - ஏ2பி2சி4எஸ், சு.கொலஸ்ரிகா - ஏபிசி6எஸ், ம.யசோதா - பி4சி3எஸ், ம.கனிசியா - பிசி4எஸ், யோ. சுபாஜினி -3சி3எஸ்,

வி.கணாதீபன் - பி3சி2எஸ், கு.வசீகரன் -4சி5எஸ், கு.சத்தியதாசன் - 3சி4எஸ்.

## மின்னல் தாக்கி இரு பசுமடுகள் பலி

யாழ்ப்பாணம்,ஏப்.11

மின்னல் தாக்கியதில் 70 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு பசுமாடுகள் பலியாகியுள்ளன.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு வெள்ளாம்போக்கட்டியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வல்லிபுரம் நவரத்தினம் என்பவருக்குச் சொந்தமான மாடுகளே பலியாகியுள்ளன. (202-207)

## சமுர்த்தி நிவாரணம் பெறும் 500 குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன

குருநகர்,ஏப்.11

யாழ்.மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய சமுர்த்தி நிவாரணம் பெறும் 500 வறிய குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் 20 மில்லியன் ரூபா யாழ்.மாவட்ட செயலகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இச் செயற்றிட்டம் யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

2006 ஓகஸ்ட் மாத்தின் பின் பாதிக்கப்பட்ட அல்லது இழப்புகள் ஏற்பட்ட குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அக்குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் இச்செயற்றிட்டம் மூலம் செய்து கொடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-51)




மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினர் அண்மையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில், சண்டிலிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட ஜே/42, ஜே/43 கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு கண்பரிசோதனை முகாம் ஒன்றை நடத்தினர்.

100இற்கும் மேற்பட்டவர்களுக்கு அந்த இடத்திலேயே கண்ணாடிகள் வழங்கப்பட்டன. கழகத் தலைவர் கே.எஸ்.துரைரட்ணம் பெண்மணி ஒருவருக்கு கண்ணாடி வழங்குவதையும் அருகில் கழக உறுப்பினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.


**Death Acknowledgement**
**Mr. S.J.Devasagayam**

Mrs.Noeline Devasagayam and members of the family of late Mr.S.J.Devasagayam wish to express our heartfelt thanks to Rev. Fathers,Rev.Sisters, our relatives, friends and neighbours who attended his funeral, sent floral tributes, messages of condolence from here and abroad and assisted us in numerous ways in our time of grief. Our special thanks are due to Rev.Fr. Jero Selvanayagam, Rector, St.Patrick's College Jaffna and Very Rev.Fr. J.P.E.Selvarajah for offering the Requiem Mass at St. Mary's Cathedral, and taking part in the final blessings. We also thank Rev.Fr. Michael Souvuntharanayagam, Rev.Fr. Sahayam, the Principal and the members of the O.G.A of Holy Family Convent Jaffna, the members of the Staff and the O.B.A, of St. Patrick's College, Jaffna, for attending the funeral, offering prayers and floral tributes.

We also thank Dr.Sivakumaran of the Teaching Hospital, Jaffna, and the Nursing Staff who attended on him during his illness.

We deeply regret our inability to thank each and every one individually.

**Mrs.Noeline Devasagayam**
**Cathedral Street, Jaffna.** (72968)


## யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஏப்.11

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலவச யோகாசன வகுப்புகள் எதிர்வரும் 15ஆம் திகதி காலை 8 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன. (202)

## மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஏப்.11

அறவழி போராட்டக் குழுவின் ஒன்பதாவது தொகுதியினருக்கான மோட்டார் சைக்கிள் திருத்தல் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 16ஆம் திகதி நுணாவில் மேற்கில் உள்ள அறவழி தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பயிற்சி நெறியில் 25 பயிலுநர்கள் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அறவழி நிலையத்தினால் ஏற்கனவே 200இற்கு மேற்பட்ட பயிலுநர்களுக்கு மோட்டார் சைக்கிள் திருத்தல் பயிற்சி வழங்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## சங்கானை சிவப்பிரகாச ம.வியில் இரண்டு மாடிக்கட்டடம் அமைப்பு

சங்கானை,ஏப்.11

'நிகொட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் இரண்டு மாடிக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தனதுரையில் 130'X 25' கொண்ட இந்த இரண்டு மாடிக் கட்டடம் மூன்று மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் தமதுரையில், சங்கானைக் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இங்குதான் 1300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இரண்டு மாடிக் கட்டடம் இல்லாத குறை நீண்ட காலத்திற்குப் பின் இப்போது நிறைவேற உள்ளது- எனத் தெரிவித்தார்.


**5ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 23 ✱ 10 ✱ 1921



உதிர்வு 08 ✱ 04 ✱ 2003

**அமரர் சிற்றம்பலம் கனகசபை**

திதி: ஷஷ்டி (11.04.2008)

குடும்பம் ஒரு கோயில்
பிள்ளைகள் அதில் தீபம் என்பதை
வாழ்வியலாக்கி மெழுகாக உருகினீர்!
பண்புக்கு இலக்கணமாய்
பாசத்தின் பொக்கிஷமாய்
குடும்பத்துக்கோர் உற்ற துணையாய்
பிள்ளைகளுக்கோர் உத்தமராய்
அவனிபோற்ற வாழ்ந்த எமது அன்புத் தெய்வமே!
எம்மூச்சுக் காற்று உள்ளவரை
உம் நினைவு எம்மோடு கலந்திருக்கும்.

நிரந்தர முகவரி:
புகையிரத வீதி,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

மனைவி,
பிள்ளைகள்.

(72977)



**4ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 27 • 04 • 1984



மறைவு 11 • 04 • 2004

**அமரர் கந்தசாமி துஷியந்**

ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
மறையவில்லை உன் நினைவு- துஷி
எனும் உறவு இருபதில் அறுந்து
உயிர் நனைய அழுகின்றோம்
உன் நினைவுகளில் என்றும்.....

இல.1, முதலாம் ஒழுங்கை,
அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

(72943)



**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 17 ✱ 08 ✱ 1934



மறைவு 12 ✱ 03 ✱ 2008

**திருமதி பொன்னுத்துரை பொன்னம்மா**

கடந்த 12.03.2008 புதன்கிழமை எங்களை விட்டுப் பிரிந்த எங்கள் அன்புத்தாய் திருமதி பொன்னுத்துரை பொன்னம்மா அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (11.04.2008) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் கிழக்கு.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள். (72933)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உணவு, போஷாக்கின்மையால் தமிழ்த் தாயகம் பெரும் பாதிப்பில்!

இலங்கையில் - குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட வடக்கு, கிழக்கில் - மக்களின் உணவுப் போஷாக்கு நிலைமை குறித்து ஐ.நா. அதிகாரிகள் அதிர்ச்சித் தகவல் வெளியிட்டிருக்கின்றார்கள்.

சுமார் இரண்டு கோடி மக்கள் தொகையைக் கொண்ட இலங்கையில் சரி அரைவாசிப்பேர்தான் - அதாவது ஒரு கோடி மக்கள்தான் - ஆகக்குறைந்த தேவை அளவு கலோரிப் பெறுமானத்துக்காவது போஷாக்கு உணவை உட்கொள்கின்றார்கள் என்ற புள்ளி விவரத்தைத்தான் அதிர்ச்சித் தகவலாக ஐ.நா.நிபுணர்கள் வெளியிட்டி ருக்கின்றார்கள்.

சராசரியாக ஒரு மனிதன் நாளொன்றுக்கு ஆகக் குறைந்தது 2,030 கலோரிப் பெறுமான அளவுக்காவது உணவை உட்கொள்ள வேண்டும். ஆனால் நாட்டின் அரைவாசிப் பேருக்குத்தான் இந்த வாய்ப்பு வசதி கிட்டுகின்றது. எஞ்சியோரின் நிலைமை மோசம்தான்.

இலங்கையில் வறுமைக்கோட்டில் வாழும் குடும் பங்களைச் சேர்ந்தோர் சராசரியாக 1,696 கலோரி உணவைத்தான் தினசரி பெறுகின்றார்கள் என்கின் றன ஆய்வுத் தகவல்கள். வறுமை நிலையைத் தாண் டிய இலங்கையர்கள் மட்டும் தினசரி சராசரியாக 2,194 கலோரி அளவுக்கு உணவைப் பெறுகின்றார்களாம்.

நெல் உற்பத்திப் பாதிப்பு, உலகளாவிய ரீதியில் உணவுப் பொருள்களின் விலையேற்றம், இலங் கையில் ஏற்பட்டுள்ள யுத்தப் பிணக்கு, அதனால் நேர்ந்துள்ள பொருளாதாரச் சீர்குலைவு போன்ற வற்றால் இலங்கை மக்கள் உணவுப் போஷாக்கு சீர்கேட்டை எதிர்நோக் குகின்றனர் என்றும் ஐ.நா. ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

''இலங்கையில் அதிக உச்சமாக போஷாக்கின்மை யால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் யுத்தத்தின் கொடூரத் தில் சிக்குண்டுள்ள வடக்குக் கிழக்கும் மற்றும் நாட்டின் மத்திய பகுதிகளை அண்டிய வரட்சிப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள்தாம்'' - என்று இலங்கையில் உலக உணவுத் திட்டத்துக்குப் பொறுப்பான பிரதித் தலைவர் ஜேன் யுவிஸ் லிகுயும் கூறியிருக்கின்ற கருத்து ஊன்றிக் கவனிக்கத்தக் கதாகும்.

''இலங்கையில் வழமையாக இடம்பெறும் சிசு மரண வீதத்துடன் ஒப்பிடுகையில் இந்த நாட்டில் பொதுவாக இருக்கவேண்டிய - எடை குறைந்த - சிசுக்களின் எண்ணிக்கையை விட மூன்று மடங்கு அதிகமாக எடை குறைந்த சிசுக்கள் இங்கு காணப்படு கின்றன. இதற்கு போதிய உணவின்மையும், போஷாக்கின்மையுமே பிரதான காரணங்களாகும்.'' - என்றும் அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

பொதுவாக இலங்கையில் ஐந்து வயதுக்குக் குறைந்த 43 வீதமான குழந்தைகள் எடை குறைவுப் பிரச் சினையை எதிர்நோக்குகின்றன என்றும் கூறப்படு கின்றது.

''கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார் மாவட்டங்கள் பெரும் உணவுப் பற்றாக் குறை மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் போன்ற நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்கள் அவசர மனிதநேய நெருக்கடிக்குள் சிக்கியுள்ளன என்றும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.'' - என உலக உணவுத்திட்ட உயர் அதிகாரி லிகுயும் மேலும் குறிப் பிட்டிருக்கின்றார்.

ஐ.நா. மட்டத்தில் இலங்கையில் மேற்கொள்ளப் பட்ட இந்த ஆய்வுகள், யுத்தத்தின் கொடூரத்தால் தமிழர் தாயகம் எதிர்கொள்ள நேரிட்டுள்ள மோசமான ஆபத்தை - பின்னடைவை - புள்ளி விவர அடிப் படையுடன் அம்பலப்படுத்தி நிற்கின்றன.


நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி ஆறு வீதத்துக்கும் அதிகமானது என்ற அறிவிப்பை முன் வைத்து, நாட்டின் பொருளாதாரம் மேம்பட்டு நிற்கின்றது என்ற சாரப்பட மத்திய வங்கி அறிக் கையை வெளியிட்டிருக்கும் நாட்டின் நிதி அமைச் சரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இப்படி நாட்டின் அரைவாசி எண்ணிக்கையான மக்கள் அடிப்படைத் தேவை அளவுக்குக் கூட உண்பதற்கு வசதியற்ற வர்களாகப் பட்டினியிலும், வறுமையிலும்வாடுகின் றார்கள் என்ற உண்மை நிலைவரம் குறித்து என்ன கூறப்போகின் றார்?அதுவும் உணவுப் பற்றாக்குறையி னாலும், போஷாக்கின்மையினாலும் அதிகம் பாதிக் கப்பட்டிருக் கும் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த - தமிழர் தாயகத்தின் - மக்களுக்கு அவரின் 'மஹிந்த சிந்தனை' தரப்போகின்ற பரிகாரம் என்ன?

கொடூர யுத்தத் தீவிரப் போக்கால் பேரழிவும், நிரந் தரச் சாவும், அவல வாழ்வுமே 'மஹிந்த சிந்தனை' தமிழர் களுக்குத் தந்த பரிசு; வெகுமதி.

அதன் மற்றொரு வெகுமானம்தான் தற்போது தமிழர் தாயகத்தைப் பீடித்து நிற்கும் போஷாக்கின்மை, போதிய உணவின்மையால் ஏற்பட்டுள்ள பாதிப்புப் போன்ற பின்னடைவுகள்.

பேரினவாதச் சிந்தனையை மட்டுமே தனது இலக் காகவும், கொள்கை நிலைப்பாடாகவும் கொண்ட மேலாதிக்கப் போக்கு ஆட்சிப்பீடம், சிறுபான்மையின ருக்கு அளிக்கக்கூடிய பரிசு இதுதான்.

இந்தப் பாதிப்பைச் சமாளித்துத் தன் காலில் நின்று, எதிர்காலத்தைப் பலமாக எதிர்கொள்வது எப்படி என் பதற்கான உபாயத்தைத் தானாகவே தேடிக் கண்டு பிடித்து, அதன்படி செயற்பட தன்னை வழிப்படுத்திக் கொள்வதுதான் தமிழர் தாயகத்துக்கு இன்றுள்ள ஒரே மார்க்கமாகும்.





## யாழ்.இந்துக் கல்லூரியில் புதிய கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ்.இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடம் நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் வீ.கணேசராசா நாடாவை வெட்டி கல்லூரிக் கட்டத்தைத் திறந்து வைத்தார். முன்னதாக கட்டடத்திறப்பு விழாவையொட்டி கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள சிவஞான வைரவர் ஆலயத்தில் விசே ட பூசை வழிபாடுகள் இடம் பெற்றன. அதன் பின்னர் அதிபரினால் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

இத்திறப்பு விழாவில் அயல் பாடசாலைகளின் அதிபர்கள, இந்துக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## யாழ்.நகரப் பகுதியில் களைகட்டும் புதுவருட வியாபாரம்



யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ்.நகரப் பகுதி புதுவருட வியாபாரத்தால் களை கட்டியுள்ளது. தென் பகுதியில் இருந்து வந்த பெருமளவான முஸ்லிம் வியாபாரிகள் இம்முறை நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

யாழ்.மின்சார நிலைய வீதி நடைபாதை வியாபாரிகளால் நிரம்பி வழிகின் றது. இப்பகுதியில் பெருமளவான முஸ்லிம் வியாபாரிகள் தென்னிலங்கையில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வந்த உடுபுடைவைகளை வீதியின் நடுவே குவியலாகக் கொட்டி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இத னால் இந்த வீதியில் மக்கள் கூட்டம் அலை மோதுகின்றது. மின்சார வீதியூடான போக்கு வரத்துகளும் தடைப் பட்டுள்ளன.

பொதுமக்கள் புது வருடத்துக்குத் தேவை யான பொருள்கள், உடு புடைவைகள் ஆகிய வற்றைக் கொள்வனவு செல்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட் டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இம்முறை உடுபுடைவைகளின் விலைகளும் வெகுவாக அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நகரில் வர்த்தக நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ளமையாலும் சனக்கூட்டம் அலைமோதுவதாலும் பிரதான வீதிகளில் போக்குவரத்து நெருக்கடி அதிகரித் துள்ளது.

(50-224)

## புத்தூர் 'கோப் சிற்றி இன்று திறப்பு

அச்சுவேலி,ஏப்.11

அச்சுவேலி பலநோக்குக் கூட்டு றவுச் சங்கத்தின் புத்தூர் 'கோப் சிற்றி' திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள் ளது.

சங்கத்தின் தலைவர் க.பேரின்ப நாயகம் தலைமையில் நடைபெறும் திறப்பு விழாவில் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையா ளரும் கூட்டுறவுச் சங்கப் பதிவாள ருமான ஆ.சுப்பிரமணியசர்மா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கோப் சிற்றியைத் திறந்துவைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பா ணம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணை யாளர் பொ.சிவலிங்கம் கலந்துகொள் வார்.

(202-111)

## மடுத்திருப்பதியில் போர் அனர்த்தம் நீங்க யாழ்.மறைமாவட்டத்தில் வழிபாடுகள்

வரலாற்றுப் புகழ்மிக்க மடுத்திருப் பதியில் ஏற்பட்டுள்ள போர் அனர்த் தம் நீங்கி அமைதி நிலவவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். மறை மாவட்டத்தின் சகல பங்குகளி லும் வசதியான நேரத்தில் வழிபாடு நடத்துமாறு யாழ்.மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத் துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது-

வரலாற்றுப் புகழ் மிக்க மடுத் திருப்பதி இலங்கை வாழ் சகல மக்க ளின் யாத்திரை ஸ்தலமாகவும் போர்ச் சூழலில் அகதிகளுக்கான புகலிடமா கவும் இருந்து வந்துள்ளதை நாம் யாவ ரும் அறிவோம். தற்போது இது போர் பிரதேசமாக மாற்றப்பட்டு கட்டடங் கள் சேதமடைந்து யுத்தப் பிரதேசமாக மாறியுள்ளது.

இதனால் மன்னார் மறைமாவட்ட மக்களும் ஆயரும் குருக்களும் அதிர்ச்சி யும் வேதனையும் அடைந்துள்ளார் கள். இது எம்மையும் கவலைக்குள் ளாக்கியுள்ளது.

இவர்களுக்கு எமது தோழமையை யும் கூட்டொருமையையும் தெரிவிக்கு முகமாக கடந்த திங்கட்கிழமை யாழ். ஆயர் இல்லத்தில் யாழ்.மறை மாவட்ட குருக்கள் ஒன்றிய அவசரக்கூட்டம் இடம் பெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

* மன்னார் ஆயருக்கும் குருக்களுக் கும் தோழமைச் செய்தி அனுப்புதல்.
* யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பி னருக்கும் போரை நிறுத்துமாறு வேண்டு கோள் விடுத்தல்.
* எல்லாப் பங்குகளிலும் நிறுவ னங்களிலும் மடுவில் ஏற்பட்ட போர் அனர்த்தம் நீங்க அமைதி வேண்டி வழிபாடு செய்தல். இதற்கு எதிர்வரும் ஞாயிறு மக்களுக்கு வசதியான நேரத் தில் வழிபாடு நடத்துதல் பொருத்த மானது என தீர்மானிக்கப்பட்டது.

இறை ஆசீரும் மடு அன்னையின் பரிந்துரையும் கிடைக்க மன்றாடு வோம் - என்றுள்ளது. (202)

## முறிந்து விழும் நிலையிலிருந்த மின்கம்பம் மாற்றப்பட்டது

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ்.நகரில் பஸ்தரிப்பு நிலையத் திற்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் சரிந்து விழும் நிலையில் இருந்த மின் கம்பம் ஒன்று மாற்றி புதிய கம்பம் போடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட கம்பம் முறிந்து விழும் நிலையிலுள்ளமை குறித்து 'உதயன்' கடந்த 5ஆம் திகதிய பத்திரிகையில் புகைப்படத்துடன் பிரசுரித்தது.

அத்துடன் இதனால் பயணி களுக்கு ஏற்படும் ஆபத்துக் குறித்தும் சுட்டிக்காட்டியிருந்தமை தெரிந்ததே.

இதையடுத்து மின்சார சபையினர் குறிப்பிட்ட கம்பத்தை மாற்றி புதிய மின் கம்பத்தை நாட்டியுள்ளனர்.

(202-111-224)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 30 | 12.04.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: ஸப்தமி | மாலை 06.10வரை |
| நட்சத்திரம் : | திருவாதிரை |
| | பி.ப.01.01வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

## குடாநாட்டு வங்கிக் கிளைகளில் புதுவருடக் கொடுக்கல் வாங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து வங்கிக் கிளைகளிலும் எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை புதுவரு டக் கொடுக்கல் வாங்கல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினத்தில் கொடுக்கல் வாங்கல்களை மேற் கொள்ளும் வங்கி வாடிக்கையாளருக்கும் புதுக்கணக்கு களை ஆரம்பிப்போருக்கும் கைவிஷே டம் வழங்கப்படுவதுடன் விஷேட பரிசில்களும் வழங்கப்படும் என வங்கி கள் அறிவித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கிக [illegible]ளைகளில் எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை கொடுக்கல் வாங்கல் இடம்பெறும். நேர விவரம் வருமாறு:

மக்கள் வங்கி (அனைத்துக் கிளை களிலும்) காலை 7 மணி முதல்.

இலங்கை வங்கி (அனைத்துக் கிளைகளிலும்) காலை 7.30 முதல்

தேசிய சேமிப்பு வங்கி அனைத் துக் கிளைகளிலும் காலை 7 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை.

ஹற்றன் நஷனல் வங்கி (அனைத் துக் கிளைகளிலும்) காலை 8 மணி முதல் முற்பகல் 11 மணி வரை.

கொமர்ஷல் வங்கி (யாழ் கிளை) பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை.

செலான் வங்கி (யாழ் கிளை) காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறைக் கலாமன்றம்
## நடத்தும்
# உலக நாடக தின விழா
## கருத்தரங்கும், கலைஞர் கௌரவிப்பும்

காலம் : நாளை (12.04.2008) சனிக்கிழமை
நேரம் : மு.ப. 9.30 மணி - கருத்தரங்கு
பி.ப. 4.30 மணி -கலைஞர் கௌரவிப்பு
இடம் : கலைத்தூது கலையகம்
286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

★ கருத்தரங்கு
பொருள் : 'ஜப்பானிய மரபுவழி அளிக்கைகள் - ஓர் அறிமுகம்'

கருத்துரையாளர் கள்:
★ நீ.மரியசேவியர் அடிகள்
★ திருமதி ஏ.வைதேகி
★ திருமதி ஜீ.ஜேன் லகுஷா

★ கலைஞர் கௌரவிப்பு
தலைமை:
திரு.ஆறுமுகம் சிவசுவாமி
*(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)*

திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்பகால உருவாக்கத்திலிருந்து இன்றுவரை அர்ப்பணத்துடன் செயற்பட்டு வரும் மூத்த உறுப்பினர்களில்

* சிற்பச் செல்வன், கலாபூஷணம் ஏ.வி.ஆனந்தன்
* இசைத் தென்றல் ம.யேசுதாசன்
* அரங்கவாரிதி, கலாபூஷணம் ஜீ.பி.பேர்மினஸ்
* கலைவேந்தன் ம.தைரியநாதன்

ஆகிய நான்கு கலைஞர்களும் திருமறைக் கலாமன்றத்தில் அவர்கள் ஆற்றிய கலைச் சேவையைப் பாராட்டி மன்றத்தின் அதி உயர் விருது வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

## தொடர்ந்து கலைநிகழ்வுகளாக
கோவலன் - கண்ணகி,
சத்தியவான் - சாவித்திரி, ஸ்ரீவள்ளி,
சாகாத மனிதம் நாடகங்களிலிருந்து சில
பாத்திரங்களின் நிகழ்த்திக் காட்டுகையும்
இசைநிகழ்ச்சியும் இடம்பெறும்.

காலையிலும், மாலையிலும் இடம்பெறும் இவ்விரு நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொலை பேசி 222 2393*
(C/552261)
திருமறைக் கலாமன்றம்.

திருமறைக் கலாமன்றத்தின் அதி உயர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படும் எமது மூத்த கலைஞர்களை வாழ்த்துவதில் பெருமையடைகிறோம்.

இலங்கையிலுள்ள திருமறைக் கலாமன்றங்கள் சார்பாக
**திருமதி செ.செபாலி ரணசிங்க**
*பிரதி இயக்குநர், திருமறைக் கலாமன்றம்*
*பாணந்துறை - [கொத்தணி].*

சர்வதேச திருமறைக் கலாமன்றங்கள் சார்பாக
**திரு.பசில் இன்பராஜன்**
*திருமறைக் கலாமன்றம் - லண்டன்.*

கலைக்கான பணியில் களம் பல கண்ட
கலைஞர்களுக்கு எமது வாழ்த்துக்கள்
**'முற்றம்' சஞ்சிகைக் குழு**
*திருமறைக் கலாமன்றம், பிரான்ஸ்.*



## என்றும் நீங்கா நினைவுடன்
# 27ஆம் நாள் நினைவஞ்சலி

பூமியின் மடியில்
13
★
01
★
1935



புற்றுநோயின் பிடியில்
16
★
03
★
2008

## அமரர் பொன்னையா தங்கராசா
[ஓய்வுபெற்ற அபிவிருத்தி வேலை அதிகாரி (S.D.W). ஓய்வுபெற்ற கட்டட மேற்பார்வையாளர் ஈரோவில், முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், சென்றல் நேசிங்கோம் ]

**நாள்கள் தான் ஓடி மறைந்தாலும் மறையாது உங்கள் நினைவு எம் ஆயுள் உள்ளவரை.**

*''மலர்வாசம்'',*
*ஏழாலை மேற்கு,*
*சுன்னாகம்.*
(72975)

*என்றும் நினைவுடன்:*
மகள், மருமகன், பேரன்
மற்றும் உறவுகள்.


# உடுவில் பிரதேச கலை, இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.11

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் உடுவில் பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் 3 இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**கட்டுரை**

கனிஷ்ட பிரிவு- அ.சாம்பவி (கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாசாலை), செ.யசோதா (உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), செ.சர்வகா (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை).

சிரேஷ்ட பிரிவு - அ.நேதிகா (இணுவில் மத்திய கல்லூரி), வே.பிரசில்வா ராதிகா (ஏழாலை சைவமகாஜனா வித்தியாலயம்)

**கவிதை**

கனிஷ்ட பிரிவு - செ.சர்வகா - (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியசாலை), செ.நித்தியா - (ஏழாலை மகாவித் தியாலயம்), ச.மேரிகனுஷா - (ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்).

சிரேஷ்ட பிரிவு - நிஷாந்தினி - (இணுவில் மத்திய கல்லூரி), ச.லூட்விதுஷா (ஏழாலை மகாவித்தியாலயம்), த.கல்யாணி (இணுவில் மத்திய கல்லூரி).

**சிறுகதை**

கனிஷ்ட பிரிவு - செ.யசோதா - (உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), கோ.சங்கீதா - (ஆத்மஜோதி தியான மணி மண்டப அறநெறி பாடசாலை), வி.மிதிலா (உடுவில் முருகமூர்த்தி வித்தி யாசாலை).

சிரேஷ்ட பிரிவு - த.நாரணி - (இணுவில் மத்திய கல்லூரி), வ.ராஜரூபன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), த.டினோஜா ( தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை).

திறந்த பிரிவு - வே.கிரிசா - (வங்கியடி, இணுவில் கிழக்கு), ச.நளாயினி - (இல81, மயிலணி, சுன்னாகம்), சு.பரமேஸ்வரலிங்கம் - (இணுவில் தெற்கு இணுவில்)

**பாடலாக்கம்.**

திறந்த பிரிவு - ச.நளாயினி - (இல 81, மயிலணி, சுன்னாகம்), ந.கருணைதாசன் - (கந்தரோடை, சுன்னாகம்), ச.ஜெயந்தன் - (பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி, இணுவில் தெற்கு).

**கவிதை**

திறந்த பிரிவு - பா.பாலச்சந்திரன் - (சண்முகபவனம், மயிலணி, சுன்னாகம்), ஆலயமணியம் - (ஏழாலை), சி.சண் முக வடிவேல் - (ஏழாலை மேற்கு சுன்னாகம்).

**சிங்களக் கவிதை**

ப.அருந்தவராஜா (தாவடி தெற்கு கொக்குவில்).

# தென்மராட்சிப் பிரதேச முதியோருக்கு அ.அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.11

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் முதியோர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களின் 30 பேரின் அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

முதியோர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு பிரதே செயலர் செ.ஸ்ரீனிவாசன் கேட்டுள்ளார்.

(202-207)

# வாகனம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.11

அறவழி போராட்டக் குழுவுக்கு புதிய வாகனம் வழங்கப்பட்டுள்ளது. கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்தினர் யாழ்.அரச அதிபர் ஊடாக அண்மையில் இந்த வாகனத்தை வழங்கியிருந்தனர்.

(202-207)


## வீடு விற்பனைக்கு

நீர்கொழும்பு, பெரியமுல்லை பாண்கடைச் சந்திக்கு அண்மையில் மேலும் கீழுமாக தனித் தனிக் குடி இருக்கக்கூடிய வகையில் வெவ்வேறான நுழைவாயில் நீர், மின்சாரம், தொலைபேசி இணைப்புக்களுடன் கொண்ட இரு மாடி வீடு விற்பனைக்கு
தொடர்பு: 071 4246422
(79977)



## கண்டெடுக்கப்பட்டுள்ளன

இணுவில் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டு, இலங்கை மின்சாரசபைப் பிரதிப் பொது முகாமை யாளர் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தக்க ஆதாரங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளவும்.



## திருமண வாழ்த்து

இன்று திருமண பந்தத்தில் இணையும் எமது பாடசாலையின்
நலன்விரும்பி வைத்தியகலாநிதி லயன் சோ.சுந்தரராஜன்
அவர்களது சிரேஷ்ட புதல்வன்
**ரமணன்**
அவர்களும் அவர்தம் துணைவி
**கிருபாலினி (சுதா)**
அவர்களும் அட்டகிரி முருகன் அருளால் பதினாறு
பேறுகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க
என மனமார வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்,
யா/நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை.
(72978)



## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி
## தேக்க மரம் ஏல விற்பனை

வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கத்தின் வளவில் உள்ள தேக்கமரம் ஏல விற்பனை செய்யப்பட இருக்கிறது.

காலம்: 26.04.2008 சனிக்கிழமை முற்பகல் 10 மணி.

தேக்கமரத்தை பார்வையிட விரும்புவோர் காரியாலய கடமை நேரத்தில் பார்வையிடலாம்.

*நீர்வேலி.* (சி/552264) பொது முகாமையாளர்.



# YOGI'S BEAUTY
(Academy of Beauty Culture, Hair Dressing & Home Science)

மீண்டும் யாழ்.நகரில் "Yogi's Beauty" நிறுவனத்தின் சகல சேவைகளும் ஆரம்பமாகியுள்ளன.

★ நவீன முறையிலான மணப்பெண் அலங்காரங்கள்
(இது எமது தனித்துவம் மிக்க விசேட சேவை)
"Bridal Make-up is our Speciality, with Latest Fashion Jewelleries.

★ அழகுக்கலை, ஒப்பனை வகுப்புகள் நடைபெறுகின்றன.
"Beauty Culture, Make-up and Hair Dressing)
நவீன கற்பித்தல் முறையிலான பயிற்சி நெறிகள்
ஒரு மாத காலத்தில் பயிற்சிகள் முடித்து
Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்.
ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.



ஆசிரியை:
திருமதி யோகினி சண்முகநாதன்
*75, அம்மன் வீதி, நல்லூர்*
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
*யாழ்ப்பாணம்.*

T.Phone:
021 222 2796
0777 164923
(72767)



# மரண அறிவித்தல்
## *திருமதி மனோகராணி இரத்தினசிங்கம்*



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோகராணி இரத்தினசிங்கம் அவர்கள் 07.04.2008 அன்று மாலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனித்தம்பி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - PWD) - பத்மாவதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், இ.மி.ச.)அவர்களின் அன்பு மனைவியும் ரம்யாவின் (RHO,மக்கள் வங்கி, கன்னாதிட்டி) அன்புத் தாயும் பரந்தாமன் (AGA (HQ),மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமியும் தர்மரஞ்சிதம் காலஞ்சென்ற சிறிசந்திரபாலன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - இ.மி.ச.) மற்றும் செல்வராணி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - வர்த்தகத் திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் யதுகுலசிங் (ஓய்வுபெற்ற உடற்கல்வி விரிவுரையாளர்), லலிதாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் சம்பந்தியும் காலஞ்சென்ற A.R.சண்முகலிங்கம் (புகையிரத நிலைய அதிபர் - யாழ்ப்பாணம்) மற்றும் விஜயலக்ஷ்மி, பரராஜசிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - வர்த்தகத் திணைக்கள), சிவக்கொழுந்து தர்மராசா, பரமேஸ்வரி நாகலிங்கம், ஞானேஸ்வரி தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற சயந்தனின் சிறிய தாயும் பவித்ரா (Textile Engineer), பவானி (பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமியும் ஜேனுகா (யாழ்.மருத்துவபீட மூன்றாமாண்டு), ராகவன் (மொறட்டுவ பல்கலைக் கழகம்) ஆகியோரின் பெரியம்மாவும், ரவிராஜ் ஜெயா, தனராஜ் புஷ்பி, வசந்தி தயாளன், சுசிலா விஜயயேந்திரன், தயா ஜீவானந்தன், சுகந்தி வாகீசன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 56, பலாலி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (11.04.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இரத்தினசிங்கம் (கணவர்),
பரந்தாமன் (மருமகன்).

*56, பலாலி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (72976)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

## ஜோன் ஷிஹான்

11-04-2008

திரு.திருமதி.உதயகுமார்-றொஷாணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜோன் ஷிஹான் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (11-04-2008) வட்டுக்கோட்டையிலுள்ள எபனேசர் ஜெப ஆலயத்தில் வெகுவிமரிசையாகக்கொண்டாடுகின்றார்.

ஷிஹான் குட்டியை அன்பு அப்பா-அம்மா, பப்பா-அம்மம்மா,அப்பம்மா,பெரியப்பா-பெரியம்மா, மாமா-மாமி,ஆசையம்மா-ஆசையப்பா, சித்திமார், சித்தப்பாமார், அத்தைமார்,மாமாமார், அக்காமார்,அண்ணாமார், சிசுமாமா, உற்றார்-உறவினர்கள், மற்றும் எபனேசர் ஜெப ஆலய போதகர்கள், ஊழியர்கள்,விசுவாசிகள் யாவரும் இயேசுக்கிறீஸ்துவின் கிருபையோடு சகல நற்குணத்திலும், ஞானத்திலும், சகல ஆசீர்வாதங்களோடும் வாழ வாழ்த்துகின்றார்கள்.



தகவல்: மாமா-(போதகர்-லொறிங்ரன்)
மாமி-(ஸ்ரெபானி)

"எபநேசர்"
வட்டுக்கோட்டை.
TP:060-221-8157


# அமைச்சர் ஜெயராஜின் பூதவுடல் நல்லடக்கம்

குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் நல்லடக்க ஆராதனை நீர்கொழும்பு, கொச்சிக்கடை வெலிஹேன றோமன் கத்தோலிக்க தேவாலயத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது. பின்னர் அவரது பூதவுடல் தேவாலய வளாகத்தில் அரச மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

வெலிஹேனவிலுள்ள அன்னாரது வீட்டில் வைக்கப்பட்டிருந்த பூதவுடலுக்கு நேற்று நண்பகல் 12 மணிவரை பொதுமக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

அதன்பின்னர் பூதவுடல் இறுதி ஊர்வலமாக ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே விளையாட்டு மைதானத்திற்கு நேற்றுப்பகல் ஒருமணியளவில் எடுத்துவரப்பட்டு அங்கு மதச்சடங்குகளும் அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன.

பின்னர் முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவரின் இறுதி ஊர்வல நிகழ்வின் போது ஹெலிக்கொப்ரில் இருந்து மலர்கள் தூவப்பட்டன.

(உ)


## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று பிற பாடசாலைகளில் உயர்கல்வியைக் கற்று 2007ஆம் ஆண்டு க.பொ.த.(சா/த). பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதிலே பெரு மகிழ்ச்சியடைகின்றோம். 8A யும் அதற்கு மேற்பட்ட பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் அனைவரையும் 16.04.2008 புதன்கிழமை பி.ப சரியாக 2 மணிக்கு பாடசாலையில் நடைபெறும் மதிய போசன ஒன்று கூடலில் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.



# பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். ⟷ இரு இடங்களிலும் ⟷ கே.கே.எஸ். வீதி, இணுவில்.

மீண்டும் புதிய பிரிவு நாளை (12.04.2008) ஆரம்பம்

A/L 2010

கலை, வர்த்தகப் பிரிவுகள்
(சனி - ஞாயிறு)

நீங்கள் நன்கு அறிந்த யாழ். நகரின் பிரபல்யம் மிக்க ஆசிரியர் குழுவினால்

| A/L 2010 | யாழ்ப்பாணம் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | சுதாகரன் | சுதாகரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக் கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| அளவையியல் | R.P.சர்மா | ஜெயசுரேஸ் |
| அரசியல் | றஜீவன்,ஜெனா | சுகாஷ் |
| இந்து சமயம் | தரன் | தரன் |
| கிறிஸ்தவம் | ஜெயமோகன். | ஜெயமோகன் |
| வரலாறு | சுதன் | சுதன் |
| நாட. அரங்கியல் | கணேஷ் | கணேஷ் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |


## ஆசிரியர் ஐ.கமலநாதன் மணிவிழாக் கலந்துரையாடல்

யாழ். இந்துக்கல்லூரியின் ஆசிரியர் திரு. ஐ.கமலநாதன் அவர்கள், 24.04.2008 அன்றுடன் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெறுகிறார். அவருக்கு மணிவிழாக் கொண்டாடும் முகமாக தென்மராட்சியில் அவரிடம் கற்ற மாணவர்களை நாளை (12.04. 2008) சனிக்கிழமை பி.ப 2.00மணிக்கு யா/சாவகச்சேரி இந்தக்கல்லூரிக்கு கலந்துரையாடலுக்காக ஒன்று கூடுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

சாவகச்சேரி விழா அமைப்பாளர்

# பூவரசங்குளத்தில் கொள்ளையர்கள் அட்டகாசம்

வவுனியா, ஏப். 11

வீடு ஒன்றுக்குள் புகுந்த கொள்ளையர் குழு ஒன்று அங்கிருந்தோரைக் கத்தியால் வெட்டியும் பொல்லுகளால் தாக்கியுமுள்ளது. இதில் பெண்கள் மூவர் உட்பட ஐவர் படுகாயமடைந்தனர்.

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையின் அவசரப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதே இடத்தைச் சேர்ந்த குலசேகரம் தேவராசா, தேவராசா லலிதா தேவி, தேவராசா கிருஷ்ணராஜ், கிருஷ்ணராஜ் சர்மிளா, தேவராசா தர்மினி ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

தலைப்பகுதியில் பலமாகத் தாக்கப்பட்டுக்காயம் அடைந்தவர்கள் பேச முடியாத நிலையில் இருப்பதால் விசாரணைகளை மேற்கொள்ள முடியவில்லை என்று வவுனியா பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

(ஜ)


# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ
18.01.1942

மண் நெகிழ
08.04.2003

அமரர்
நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்

துணிவோடு துணையாக துன்பங்கள் களைந்தீர்
தூணாக இருந்தெங்கள் துயரங்கள் தீர்த்தீர்
காணாமல் ஐந்தாண்டு கழிந்திடவே ன் வைத்தீர்
விழுதாக வாழ்ந்தெம்மை விருட்சமாய் வளர்த்தீர்
தொழத்தகு தெய்வமாய் தோதாய் நீர் ஆனீர்
அழுகின்றோம் தொழுகின்றோம் ஆற்றும் எம்மனதை
முழுதாக எம்வாழ்வில் மூழ்கிவிட்டீர்! சாந்தி!!

உசன்,
மிருசுவில்.

இங்ஙனம்.
குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்கள்



## இராசையா தெய்வேந்திரம்

கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் தற் போது 284, நாவலர் வீதி, நல்லூரை தற்காலிக முகவரியாகவும் கொண்ட இராசையா தெய்வேந்திரம் அவர்கள் (09.04.2008) புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னார் இராசையா- ரத்தினம் அவர்களின் அன்பு மகனும், கண்ணகையின் அன்புக் கணவரும் பொன்னம்மா, தங்கம்மா தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரவீந்திரன், விமலா, கௌரி, தமிழினி, குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும். அமுதா, சோதிலிங்கம், சந்திரபாலன் ஆகியோரின் மாமனாரும். தீபக், தீபனா, கௌத்தம், கௌசன், சர்மிதா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல 284, நாவலர் வீதி, நல்லூர் எனும் இடத்தில் இன்று (11.04.2008) வெள்ளிக்கிழமை முற்பகள் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

284, நாவலர் வீதி,நல்லூர்

தகவல்:
குடும்பத்தினர்



## மூத்ததம்பி சுப்பிரமணியம்

ஏழாலை மத்தியை பிறப்பிடமாகவும், ஊரெழு கிழக்கு, சிவன் வீதி, உரும்பிராய கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்த தம்பி சுப்பிரமணியம் நேற்று(10.04.2008) வியாழன் மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்ததம்பி-சின்னத்தங்கம் ஆகியோரின் கனிஸ்ட புத்திரனும் காலஞ்சென்ற அப்புத்துரை- இராசமுத்து ஆகியோரின் மருமகனும், திருமதி சிவயோகத்தின் அன்புக் கணவரும் சிங்கராசா, கணபதிப்பிள்ளை, சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற மகாலிங்கம், தங்கராசா(கனடா), செல்வராணி, பாலச்சந்திரன்(கனடா), புஸ்பராசா(கனடா), ஆனந்தராணி, தவராசா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் குணசிங்கம்(லங்கா சிமெந்து லிமிட்டெட்), பகீரதன்(ஆசிரியர், கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கிலுள்ள இல்லத்தில் இன்று (11.04.2008) வெள்ளிக் கிழமை நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் உரும்பிராய் இளங்காடு மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
செ.பகீரதன்



## சிவசம்பு வேல்முருகு

(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம், சாவகச்சேரி)

புலோலியை பிறப்பிடமாகவும் கந்தர்மடம், திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சி.வேல்முருகு நேற்று (10.04.2008) வியாழக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவசம்பு -வள்ளிப்பிள்ளையின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற சீவரெத்தினத்தின் அன்புக் கணவரும், சந்திரமதி, ஆறுமுகம், பவானி ஆகி யோரின் அன்புக் தந்தையாரும், காலஞ்சென்ற துரைராஜசிங்கம் (தேங்காய் துரை) மாமனாரும், காலஞ்சென்ற தர்மினி, குகபரன், பிரியா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2008) வெள்ளிக்கிழமை காலை 11 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

250, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரவன்ஸ அணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது வாகன சாரதியுடன் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் புத்தளம் மாவட்ட ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சமன்சிறி ஹேரத்தின் வீட்டுக்குவந்தசிலர் அவரைத்தாக்கிவிட்டு, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மொனறாகலை மாவட்ட ஜே.வி.பி. எம்.பியான பத்ம உதயசாந்தவிற்குச் சொந்தமான வாகனத்தைக் கடத்திச் சென்றுள்ளனர்.

நாடாளுமன்ற வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் கடத்தப்பட்டுள்ளமை குறித்து சபாநாயகர், நாடாளுமன்றப் பதில் செயலாளர் நாயகம் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்தாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த வாகனங்கள் கடத்தப்பட்ட சம்பவத்துடன் ஜே.வி.பியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு முக்கிய தொடர்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## ஐ.தே.கட்சியின் சதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம் காரணமாகவே ஜே.வி. பி. இரண்டாக உடைந்தது. அக்கட்சியின் சதித்திட்டத்திற்கு ஜே.வி.பியைச் சேர்ந்த சிலர் உடன்பட்டிருந்தமை வேதனைக்குரிய விடயம்.

ஐக்கிய தேசிய கட்சியின் எம்.பி.ரவிகருணாநாயக்கவும் ஜே.வி.பி.யின் எம்.பி அநுரகுமா திசாநாயக்கவும், ஒன்றிணைந்தே ஜே.வி.பியை இரண்டாகப்பிளவுறச் செய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் அடிக்கடி சந்தித்து சதித் திட்டங்களைத் தீட்டிவருகின்றனர். இதை நாம் நன்கு அறிவோம். எமக்கு அடிக்கடி அச்சுறுத்தல்விடுக்கப்படுகின்றது. எமது பாதுகாப்பு உடனடியாக அதிகரிக்கப்படவேண்டும்.

எமது பாதுகாப்பை அதிகரிக்குமாறு கோரி பொலிஸ் மா அதிபரிடமும் பாதுகாப்புத் தரப்பினரிடமும் முறைப்பாடு செய்துள்ளோம். உடனடியாக எமது பாதுகாப்பு அதிகரிக்கப்படவேண்டும்.

இது தொடர்பாக நாம் சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரிடமும் முறைப்பாடு செய்துள்ளோம். எமது பாதுகாப்பை அதிகரிக்க இவர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கவேண்டும்.- என்றார். (அ-உ)

## தமிழர்களின் பிர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணமாக அமைந்த தாக்குதல் சம்பவத்தை கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 6ஆம் திகதி அமைச்சர் ஜெயராஜை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறேன். இதில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறேன் - என்றும் ஆர்பர் அம்மையார் குறிப்பிட்டுள்ளார்.

## மத, கலாசார மைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரோதமானதல்ல.

எனினும், பொதுமக்களையும், மோதலில் ஈடுபடாதவர்களையும் பாதுகாக்க விசேட விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன . இவர்கள் தாக்கப்படக்கூடாது. பொதுமக்களுக்குப் பாரிய சேதத்தை ஏற்படுத்தும் விதத்தில் இராணுவ இலக்குகள் மீது தாக்குவதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் தென் பகுதியில் தற்கொலைக் குண்டுகள் பொதுமக்களைக் கொன்று காயப்படுத்தும் அதேவேளை வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தொடரும் மோதல்கள் அப்பகுதிகளில் உள்ள மக்களைத் தொடர்ந்தும் பாதித்து வருகின்றன.

இலங்கையின் வட பகுதியில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மடு தேவாலயத்திற்கு அருகில் உள்ள சூழ்நிலையே இதற்கான உதாரணமாகும்.

இப்பகுதியில் வசிக்கும் மக்கள் இரு தரப்பிற்கும் இடையிலான மோதலில் சிக்கியுள்ளதுடன் 2007 - 2008இல் பல தடவைகள் அவர்களின் இயல்பு வாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

தீவிரமடையும் மோதல்கள் காரணமாக, மடு தேவாலயத்திலிருந்து மடுமாதா சிலை பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

[illegible]தாபிமான சட்டத்தின்படி மோதலில் ஈடு[illegible]ள்ளவர்கள் - மதம் சார்ந்த கட்டடங்கள் உ[illegible] கலாசார சொத்துக்களை பாதுகாப்பதற்கு ந[illegible]க்கை எடுக்க வேண்டும்.

மிகவும் அவசரமான இராணுவ அவசியம் ஏற்பட்டால் வேறுவிதமாக செயற்படலாம்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு மிகவும் அவசியமானதேவை உருவாகியுள்ளது. மோதல் தீவிரமடைந்தமை பொதுமக்களின் உயிரிழப்பை அதிகரிக்கச் செய்துள்ளது. (அ-உ)

## சுலோவோக்கியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தக்கூடிய அபாயகரமான ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் விதிமுறைகள் தடை செய்திருக்கின்றன என்று அந்த அமைப்பின் ஆயுத வர்த்தக கண்காணிப்புக் குழுத் தலைவர் றோய் ஸ்பிஸ்டெர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

''எங்கு மனித உரிமை மீறல்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறதோ" அல்லது "எங்கு பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பு சீர்குலைந்திருக்கிறதோ'' அப்பகுதிகளுக்கு ஆயுதங்களைவிற்பனை செய்யக்கூடாது என்று அந்த விதிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இன மோதல்களில் அந்நாட்டு இராணுவம் பயன்படுத்தும் ஆயுதங்களால் சில நேரங்களில் பொதுமக்கள் பாரபட்சமின்றி பாதிக்கப்படுகின்றனர் என்று அறிக்கைகள் வெளியாகியிருக்கின்றன. இந்நிலையில் போர் நடைபெறும் பகுதிகளுக்கு பெரும்பாலான சுயாதீன கண்காணிப்பாளர்கள் பயணிக்க இலங்கை அரசால் தடைவிதிக்கப்பட்டிருப்பதால் முழு உண்மையை அறிய முடியாமல் உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை -

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆயுத விற்பனை தொடர்பிலான நடத்தை விதிகளை மீறவில்லை என்று சுலோவோக்கிய பொருண்மிய அமைச்சுக் கூறியுள்ளது. (க-ர)

## உயிரிழந்த படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே தயாசிறி ஜயசேகர எம்.பி. இதனைத் தெரிவித்தார். படையினருக்கு வழங்கவேண்டிய கடந்த மாதத்திற்கான சம்பளத்தை அரசு இன்னும் வழங்கவில்லை. இதனால் அவர்களது குடும்பங்கள் பட்டினியாகவே புதுவருடத்தைக் கழிக்க வேண்டியுள்ளது. - என்றார். (க-07)

## உணவுப் பற்றாக்குறை வரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயம் இடம்பெறும் பகுதிகளில் மக்கள் கடின வேலைகளில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு அதிகளவு கலோரிப் பெறுமான உணவு தேவை. எனினும் விவசாய நடவடிக்கை இடம்பெறும் அநேக பகுதிகள் வறிய பகுதிகளாகக் காணப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் மோதல் நடைபெறும் பகுதிகளில் இந்த நிலை மேலும் மோசமானதாகவுள்ளதாக உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே தொடரும் மோதல்களும் ஒட்டுமொத்த உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மட்டம் குறித்த கவலையை அதிகரித்துள்ளன என உலக உணவுத்திட்டம் குறிப்பிட்டுள்ளது.

### வாழ்வாதார நெருக்கடி

உலக உணவுத்திட்டம் 2007 இல் மேற்கொண்ட ஆய்வில் மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணவுப்பற்றாக்குறை அதிகமாகக் காணப்படுவது தெரியவந்தமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய பகுதிகள் மிக மோசமான உணவுப் பற்றாக்குறை நிலவும் வாழ்வாதார நெருக்கடி காணப்படும் பகுதிகளாகவும் யாழ்ப்பாணமும் மட்டக்களப்பும் அவசர மனிதாபிமான நெருக்கடிப் பகுதிகளாகவும் கணிக்கப்படுகின்றன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் பணவீக்கம் அதிகரித்துள்ளதால் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து தேசிய போஷாக்கு வீதம் மேலும் குறைவடையுமென்றும் உலக உணவுத் திட்ட அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் மோதல் நடைபெறும் பகுதிகளில் வழமைக்கு மாறான மழை பெருமளவு நெற்பயிர்ச்செய்கையை அழித்துவிட்டது. இதனுடன் உலக உணவு விலை அதிகரிப்பு மற்றும் உணவுப் பற்றாக்குறை என்பன இணைந்து எதிர்காலத்தில் பாரிய பிரச்சினை ஏற்படவுள்ளமையைப் புலப்படுத்துகின்றன என உலக உணவுத்திட்ட அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

இதேவேளை, இலங்கையின் இரண்டுகோடி மக்கள் சனத்தொகையில் அரைவாசிப் பகுதியினருக்கே ஆகக் குறைந்த நாளாந்த கலோரி உணவு கிடைப்பதாகவும் ஆய்வுப் புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன. (அ-உ)

## நல்லூரில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்துக்கும் இடையில் இச்சம்பவம் நடைபெற்றது.

காயமடைந்தவர் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல்களை மேற்கொண்டனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## சர்வதேச ஊடக அமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய தேவையிருப்பதால், இலங்கையில் ஊடகவியலாளர்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சர்வதேச நடவடிக்கைகளுடன் இணைவதாக 46 ஊடக அமைப்புகள் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கான இந்தக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளன.

பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் அவர்கள் மீதான தாக்குதல்கள் ஆகியவற்றை இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினர் தடுத்து நிறுத்துவதற்குத் தவறியுள்ளனர் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களை சட்டத்தின் முன் நிறுத்தத் தவறியிருப்பது சமாதானத்தை மேலும் தனது பொறுப்பிலிருந்து அரசு ஒதுக்கியிருப்பதையே எடுத்துக்காட்டுகின்றது எனவும் அவை குறிப்பிட்டுள்ளன.

சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைய ஊடகவியலாளர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசும் பொலிஸாரும் செயற்படும் வகையில் அவசர நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை ஜனாதிபதியை அவை கோரியுள்ளன.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பட்டயத்தில் கையெழுத்திட்ட நாடு என்ற வகையில் அப்பட்டயத்தில் குறிப்பிட்டுள்ள கடப்பாடுகளை இலங்கை அரசு பின்பற்றுவதுடன், ஊடகவியலாளர்கள் உட்பட அனைத்து மக்களினதும் பேச்சு உரிமையை மதிக்கவேண்டும் என்றும் அந்த அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

ஊடகவியலாளர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய தாக்குதல்களை தடுத்து நிறுத்தும் வகையில் அந்தப் பட்டயத்தில் குறிப்பிட்டுள்ள 19ஆவது சரத்துக்கு அமைய செயற்படவேண்டும் எனவும் ஊடக அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

யுத்த வலயங்களிலும் பிரச்சினைகள் உள்ள பகுதிகளிலும் செய்திகளைச் சேகரிக்கும் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயுத மோதல்களுடன் தொடர்புடைய சகல தரப்பினரும் மோதல்கள் இடம்பெறும் பகுதிகளிலுள்ள ஊடகவியலாளர்கள், அவர்களது உதவியாளர்கள், பொதுமக்கள் ஆகியோரைப் பாதுகாக்கும் வகையில் சர்வதேச சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படவேண்டும் என 2006ஆம் ஆண்டு பாதுகாப்புச் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஊடகவியலாளர்களுக்கு மிகவும் ஆபத்தான இடம் இலங்கை என்ற கருத்தை ஜனாதிபதி உணர்ந்திருப்பார் எனவும் ஆறு ஊடகவியலாளர்கள் கடந்த வருடம் கொல்லப்பட்டனர் என்றும் மேலும் பலர் அச்சுறுத்தல் மற்றும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் மேற்படி 46 அமைப்புகளும் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளன.

25 யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்றும், மேலும் பலர் ஒளிந்திருக்கிறனர் என்றும் அரசும் அதிகாரிகளும் அவர்களைப் பாதுகாக்கவும் விசாரணைகளை நடத்தவும் தவறிவிட்டதாகவும் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டள்ளது.

இதேவேளை, இலங்கை ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் கடந்த டிசெம்பர் மாதத்தில் நடத்தப்பட்ட தாக்குதலை நேரில் கண்டவர்கள் அல்லது செய்திகளை வெளியிட்டவர்களுக்கு எதிராக அமைச்சர் மோர்வின் சில்வா தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை விடுத்து வருகிறார் என்றும் அவர்களுக்கு எதிராக தாக்குதலை நடத்தி வருகிறார் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


அனேக மாணவர்கள் ஆவலோடு காத்திருந்த புதிய பிரிவு
A/L 2010
ஆரம்பம் 12.04.2008
சனி 12 மணி
கலை | வர்த்தகம்
யூனிவேர்சல்
யா/ இந்து மகளிர் கல்லூரி அருகே)

A/L - 2010
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
12.04.2008 காலை 8.30
நாவலர் வீதி | ஸ்ரான்லி வீதி
DMI

பிறைற்மன் கல்வி நிறுவனம்
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்.நகர்
பாராட்டி வாழ்த்துகின்றோம்
க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் எமது நிறுவனத்தில் கல்வி கற்ற அனைத்து மாணவர்களும் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளனர். இவர்களில் கூடுதலான பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் விவரம்
★ செல்வி தீபிகா - 9 AC
★ செல்வி டர்சினி - 8A2B
★ செல்வன் ஜனகன் - 6A4B
100% சித்தி நிறுவனத்தின் வெற்றி

பொருளியல்
N.B.கஜீதரன்
A/L 2010 பிரிவு 2
ஆரம்பம் 12.04.2008 (சனிக்கிழமை)
நாவலர் - ஆனைப்பந்தி
விக்னா - யாழ்ப்பாணம்
SHAMROCK - ஈச்சமோட்டை
BRAIN POWER - குருநகர்.

எடிசன் அக்கடமி
யாழ்ப்பாணம்
இன்று ஆரம்பம்
O/L Day Class
கணிதம் : B.P.பாஸ்கரன்
T.ரவீந்திரன்
விஞ்ஞானம் : இரா.செல்வவடிவேல்

GENERAL ENGLISH
A/L 2010
(Sat., Sun. - 4-5 pm
By:
K.RAMANATHASAN
NAVALAR
JAFFNA

யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில்
O/L DAY CLASS
பிரிவு - 1 இற்குரிய அனுமதிகள் 15.04.2008 வரை வழங்கப்படும்.
பிரிவு - 2 ஆரம்பம்:16.04.2008 Wed. 8.00 A.M.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

54 வருட கல்விச் சேவையில்
நாளை ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L 2010 கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம் 12.04.08(8மணி)

| | |
|---|---|
| Eco. திரு.B.கஜீதரன் | Tam. திரு.குழந்தை |
| Com. திரு.யசோ | Log. திரு.கமல் |
| Acc. திரு.P.பகீரதன் | Hic. திரு.பத்மராஜா |
| Geo. திரு.சுரேன் | Hin.திரு.N.T.தரன் |
| Hist. திரு.பத்மன் | P.Sci.திரு.றொபின்சன் |
| Chri.திரு.ஜெயமோகன் | Dram.திரு.மயூரன் |

* பஸ்ஸில் வரும் மாணவர்கள் ஸ்ரான்லி றோட்டால் வரவும்.
* துவிச்சக்கர வண்டியில் வரும் மாணவர்கள் நிறுவனத்துக்கு முன்னால் உள்ள சிறாம்பியடி றோட்டால் வரவும்.

நியூட்டன் அக்கடமி கோண்டாவில்
பாராட்டி வாழ்த்துகின்றோம்
எமது நிறுவனத்தில் கல்வி கற்று க.பொ.த.(சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களுள் கூடுதலான பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களின் விவரம்

| | |
|---|---|
| செல்வன் ச.ராகுல் - 8A2B | செல்வி பா.பிரமிளா - 2A3B3C2S |
| செல்வி வை.திவ்யா - 8A2B | செல்வன் கு.லிங்கேஸ் - 2A4C3S |
| செல்வி பா.சசிக்கா - 6A4B | செல்வி சியாமளா - AB3C4S |
| செல்வி நா.சரணிகா - 5A2C3S | செல்வன் அனோதர்சன் - A3B4C2S |
| செல்வன் சி.மஜித் - 3A3B2C2S | 100% சித்தி நிறுவனத்தின் வெற்றி |


மிதிவெடி விழிப்புணர்வுக் காலம்: ஏப்ரல் 1 - 14

யுத்தம் நடைபெற்ற பகுதிகளுக்குச் சிறுவர்களை அழைத்துச் செல்வதைத் தவிர்ப்போம்

சர்வோதயம் யுனிசெவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.